பக்கங்கள்: 15

# காலைக்கதிர்

Kalaikkathir

விழயல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 23 வெள்ளிக்கிழமை 10.11.2023 கதிர் 363

# நீதிமன்றங்களின் சுயாதீனத்தை உறுதிப்படுத்துவது மிக அவசியம்

## சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்து

**நீதிமன்றங்களின் சுயாதீனத் தன்மையைஉறுதிப்படுத்துமாறுஇலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

**இலங்கை கிரிக்கெட் சபை குறித்த இடைக்காலகுழுநியமனத்துடன்தொடர்புடைய வழக்கு பற்றி புதன்கிழமை விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான்ரணசிங்கதெரிவித்தகருத்துக் குறித்தே சங்கம் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.**

**சங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:**

**இலங்கை கிரிக்கெட் சபை குறித்த இடைக்காலகுழுநியமனத்துடன்தொடர்புடைய வழக்கு பற்றி புதன்கிழமை (8) அமைச்சரவை அமைச்சர் ஒருவரால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் மற்றும்** ☞2

## இது ரகசியம் அல்ல!

சுவஸ்திகா அருளிங்கம் தொடர்பான சர்ச்சையால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்பெயர்மேலும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே சுவஸ்திகாவைப் பேச விடாமல் தடுத்தது குறித்துப் பல்கலைக்கழகம் விமர்சனங்களை எதிர்கொண்டிருந்தது. இந்த நிலையில் சுவஸ்திகாவைப் பேச விடாது தடுத்தமை தவறு என்று தெரிவித்து கருத்துச் சுதந்திரத்தை வலியுறுத்தி யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் புதன்கிழமை அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில் சுவஸ்திகாவை மீண்டும் அழைத்து அவர் உரையாற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த அறிக்கை வெளியானதைத் தொடர்ந்து நேற்று பல்கலைக்கழக மாணவர்களில் 2--00 பேர் வரையிலானோர் போராட்டத்தில் ☞2

## கிரிக்கெட் சபை விளக்கம்

தவறான தகவல்களை நிராகரிக்குமாறும், சரியான உண்மையான தகவல்களை நம்புமாறும் இலங்கை கிரிக்கெட் சபை பகிரங்க கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை கிரிக்கெட் சபையினர் வெளிப்படைத்தன்மையைப் பேணுகின்றார்கள். மனதில்ஒருமைப்பாட்டுடன் செயற்படுகின்றார்கள். ☞8

### கருத்துச் சுதந்திரம் தொடர்பான

# யாழ். பல்கலை ஆசிரியர் சங்க அறிக்கை ஒரே நாளில் வாபஸ்

சட்டத்தரணி சுவஸ்திகா அருளிங்கம் விவகாரத்தில் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் புதன்கிழமை விடுத்த கருத்துச் சுதந்திரத்தை வலியுறுத்தும் அறிக்கையை நேற்று திரும்பப் பெற்றுள்ளது. பல்கலைக்கழக மாணவர் சங்கத்தினைச் சேர்ந்தவர்கள் உட்பட சுமார் 200 மாணவர்கள், இந்த அறிக்கைக்கு எதிராக நேற்றுப் போராட்டம் நடத்தியதைத் தொடர்ந்து அறிக்கை திரும்பப் பெறப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் பேராசிரியர் பி.ஐங்கரனால் வெளியிடப்பட்ட அறிக்கையில், "சுவஸ்திகா அருளிங்கத்தின் கருத்தான பாசிச புலிகள் என்ற கருத்துடன் எமது ஆசிரியர் சங்கத்துக்கு உடன்பாடில்லை. எமது நிர்வாகக் குழு தீர்மானத்துக்கு அமைவாக 'சட்டத்தரணி' சுவஸ்திகா அருளிங்கத்தின் உரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே கடந்த 31.10.2023 அன்று நிறுத்தப்பட்டமை தொடர்பிலான யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் அறிக்கையை வாபஸ் பெறுகின்றோம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக புதன்கிழமை சங்கம் விடுத்த அறிக்கையைத் திரும்பப் பெறவேண்டும் என்று வலியுறுத்தி யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சுமார் 200 பேர் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஆசிரியர் சங்கத் தலைவர் பணியாற்றும் இராசாயனவியல் துறைக்குள் நுழைந்து அதனை மூடினர். அங்கிருந்த மாணவர்களை வெளியேற்றினர். பேராசிரியர் ஐங்கரனை அவரது அறைக்குள் அடைத்து வைத்து மோசமான வார்த்தைகளைப் பயன்படுத்தித் திட்டினர்.

நண்பகல் வரை தொடர்ந்த இந்தப் போராட்டம் ☞9

# சித்திரசிறி குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்த நீதிமன்ற தடை

## நீதி அமைச்சர் ராஜபக்ஷ நாடாளுமன்றில் அறிவிப்பு

சித்திரசிறி அறிக்கையை நடைமுறைப்படுத்தும் செயற்பாடு நீதிமன்றத்தின் மூலமாக இடைநிறுத்தப் பட்டுள்ளதாக நீதி அமைச்சர் விஜதாச ராஜபக் ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் இலங்கை கிரிக்கெட் சபையை கலைப்பதற்கான பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றில் உரையாற்றிய ☞8

# இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தை பதவி விலக்க நாடாளுமன்று முடிவு

இலங்கை கிரிக்கெட் நிறுவனஅதிகாரிகள்பதவி விலக வேண்டுமென எதிர்க்கட்சியினால் முன்வைக்கப்பட்ட தீர்மானத்தை ஆளுங்கட்சி வழிமொழிந்ததையடுத்து, அது நிறைவேற்றப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இலங்கை கிரிக்கெட் சபை அதிகாரிகள் பதவி விலக வேண்டும் என்ற முன்மொழிவைக் கொண்ட பிரேரணையை புதன்கிழமை சபையில் முன்வைத்து உரையாற்றினார்.

கிரிக்கெட் நிர்வாகத்திற்கான புதிய ☞8

# பல்கலைக்கழக மாணவர்கள் 12 பேர் கொழும்பில் கைது

## ஆர்ப்பாட்டத்தில் ஏற்பட்ட முரண்பாடுகளால்

மருதானை தொடருந்து நிலையத்திற்கு அருகாமையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்ட பேரணியை பொலிஸார் கலைக்கும்போது ஏற்பட்ட முரண்பாடுகளால் 12 பல்கலைக்கழக மாணவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சப்ரகமுவ பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் குறைபாடுகளை நீக்குமாறு கோரி ☞9

# தீர்மானம் நிறைவேறினாலும் கிரிக்கெட் சபை பதவி விலகாது

இலங்கை கிரிக்கெட் சபை நிர்வாகம் பதவி விலகவேண்டும் என்ற தீர்மானம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டாலும் பதவி விலகல் நடக்காது என்று ஆளும் எதிர்க்கட்சியின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

நாடாளுமன்றத்தில் நேற்று இலங்கை கிரிக்கெட் நிறுவன அதிகாரிகள் பதவி விலகவேண்டுமென்று முன்வைக்கப்பட்ட பிரேரணை மீதான விவாதத்தின்போது, எதிர்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச உரையாற்றுகையில், நாங்கள் நாடாளுமன்றத்தில் இலங்கை கிரிக் கெட் சபையின் நிர்வாகத்தினர் பதவி விலக வேண்டுமென பிரேரணையை நிறைவேற்றுகின்றோம். ஆனால் அந்த நிர்வாகத்தினர் பதவியை விட்டு விலக மாட்டார்கள். அவர்கள் வெட்கமின்றி ☞9

# கிரிக்கெட் இடைக்கால சபையால் எந்தவிதமான பயனும் இல்லை

## ஜனாதிபதி அறிவிப்பு

இலங்கை கிரிக்கெட்டை மேம்படுத்துவதற்கு இடைக்காலச் சபையை நியமிப்பதால் எந்தப் பயனும் இல்லை என்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமைச்சரிடத்தில் புதிய சட்டத்தினை அமுலாக்குவது குறித்த விடயத்தினை சமர்ப்பிப்போம் என்ற யோசனையை முன்வைத்தேன். நீதிமன்றம் இதனை செல்லுபடியற்றதாக்கலாம் என்று கூறினேன். ஆகவே இதுதொடர்பில் கலந்துரையாடுவோம். அதன்போது அந்த நிலைப்பாட்டினை அறிவிப்போம். அது அமைச்சருக்குதேவைப்படும் என்பதால் ☞8

# வாகன இறக்குமதிக்கு மீண்டும் தடை விதிப்பு

பொதுபோக்குவரத்து சேவைகளுக்கான வாகன இறக்குமதி இடைநிறுத்தப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொது ☞9

# பலசரக்கு தொழில்துறையை மீள கட்டியெழுப்பவேண்டும்

## ஜனாதிபதி அழைப்பு

பண்டைய காலங்களில் நாட்டின் பிரதான வருமான மூலமாக இருந்த பல சரக்குகள் தொழில்துறையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு விரிவான வேலைத்திட்டம் தேவை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு ஜெயிக் ஹில்டன் ஹோட்டலில் புதன்கிழமை பிற்பகல் நடைபெற்ற இலங்கை பலசரக்குகள் சங்கத்தின் 19ஆவது வருடாந்த பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞2

# பணவீக்கம் அடுத்த ஆண்டு மேலும் குறைவடையுமாம்

உணவுப் பணவீக்கம் அடுத்த ஆண்டில் மேலும் குறைவடையும் என வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நலின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்கள் மத்தியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் கடந்த சில நாட்களாக நாட்டின் உணவு விலை மற்றும் உணவுப் பாதுகாப்பு தொடர்பில் அவதானம் செலுத்தினோம். அதேபோன்று நமது நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்காக எமக்கு உள்ள பிரதான வருமான வழியான வரி வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தோம். அந்த வகையில் சீனிக்கு ☞8

காலைக்கதிர் Kalaikkathir

# புதிய விளையாட்டு சட்ட யோசனை கையளிப்பு

தற்போதுள்ள விளையாட்டுச் சட்டத்திற்குப் பதிலாக புதிய விளையாட்டுச் சட்டத்தை அறிமுகம் செய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை அதன் தலைவர் ஜகத் பெர்னாண்டோவினால் அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

இந்த அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அதன் அடியொற்றிய, முறையான வரைவொன்றை தயாரித்து புதிய விளையாட்டு சட்டத்தை உருவாக்குவதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் எதிர்பார்ப்பாகும்.

இலங்கையின் தற்போதைய நீதி கட்டமைப்பு மற்றும் விளையாட்டு நிர்வாகத்தின் தற்போதைய கட்டமைப்பை ஆராய்ந்த பின்னர், ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட இந்த நிபுணர் குழு அறிக்கையில் தற்போதுள்ள சட்டத்தை முழுமையாக மாற்றுவதற்கு நடைமுறையிலிருக்கும் நீதிக் கட்டமைப்பு மற்றும் நிர்வாகக் கட்டமைப்பு ஆகியவற்றில் முழுமையான மாற்றத்தை ஏற்படுத்த தேசிய விளையாட்டு மேம்பாட்டு அதிகாரசபையொன்றை நிறுவ வேண்டியதன் அவசியம் பிரதானமாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் தேசிய விளையாட்டு சங்கங்களை ஒழுங்குபடுத்தும் வகையில் விளையாட்டு மேம்பாட்டு கொள்கைகளை வகுத்தல் மற்றும் சங்கங்களை மேற்பார்வை செய்யும் அதிகாரமும் மேற்படி அதிகார சபைக்கு இருக்க வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

தேசிய விளையாட்டு மேம்பாட்டு அதிகாரசபையின் 8 அடிப்படை நோக்கங்களை அடைந்துகொள்ள மேற்படி குழுவின் யோசனைகளை செயற்படுத்த வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேற்குறித்த அதிகாரசபையில் 11 உறுப்பினர்கள் உள்ளடங்க வேண்டும் எனவும் பரிந்துரைக்கப் பட்டுள்ளது.

அதன்படி விளையாட்டுத்துறை அமைச்சர் மற்றும் தேசிய ஒலிம்பிக் குழுவின் தலைவரின் உத்தியோகபூர்வ அதிகாரத்துக்கமைய உத்தேச அதிகாரசபைக்காக நியமிக்கப்படவுள்ளதோடு, குறிப்பிட்ட துறைகள் மற்றும் வர்த்தக வாணிப துறைகளில் பிரசித்தம் பெற்ற தொழிலதிபர்கள் மூவர், தேசிய குழுக்களில் இருந்த தலைவர்கள் அல்லது விளையாட்டுக்கு அல்லது நாட்டுக்கு சிறப்பான சேவையாற்றியவர்களில் இருவர், தேசிய ஒலிம்பிக் குழுவில் பதிவு செய்யப்படாத தேசிய விளையாட்டு குழுவொன்றில் முன்னாள் தலைவர், நிதி, கல்வி மற்றும் சுகாதாரம் ஆகிய மூன்று அமைச்சுக்களின் செயலாளர்களால் பெயரிடப்பட்டுகின்ற மூவரடங்கிய குழுவாக அமைந்திருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

உத்தேச தேசிய விளையாட்டு அதிகாரசபையின் காலம் 04 வருடங்களாகும். அதற்காக பெயரிடப்படும் அல்லது உத்தியோகபூர்வ அதிகாரத்தினால் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து பதவிகளுக்கானவர்களை நியமிப்பதற்கு விளையாட்டுத்துறை அமைச்சரின் வாயிலாக அரசியலமைப்புச் சபையின் அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அரசமைப்பு சபையினால் மேற்படி உறுப்பினர்களில் தகுதியானவரை அதிகாரசபையின் தலைவராக நியமிக்க வேண்டும் என்றும் மேற்படி குழு பரிந்துரைத்துள்ளது.

சர்வதேச ஒலிம்பிக் குழு மற்றும் ஏனைய சர்வதேச விளையாட்டு சம்மேளனங்களுக்கு அமைய தேசிய விளையாட்டு சங்கங்களின் செயற்பாடுகளில் குறைந்தபட்ச தலையீட்டை உறுதி செய்வதற்காக அரசியல் தலையீடுகளை மட்டுப்படுத்தும் அதேநேரம், முறைபாடுகள் மற்றும் சர்ச்சைகளைத் தீர்க்கும் அதிகாரத்துடன் கூடியதாக 10 நடுவர்கள் அடங்கிய விளையாட்டுக் முறைபாடுகளை நிவர்த்திப்பதற்கான நீதிமன்றம் ஒன்றை நிறுவ வேண்டும் என்ற யோசனையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

அத்தோடு இங்கு முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் குறைந்தபட்சம் மூவரடங்கிய நடுவர்கள் குழுவினாரல் தீர்க்கப்பட வேண்டும் என்பதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

மேற்படி பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் தற்போதைய விளையாட்டுச் சட்ட கட்டமைப்பிலும் நிர்வாகக் கட்டமைப்பிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

தற்போது நடைமுறையிலிருக்கும் தேசிய அரச சபையின் 1973 ஆம் ஆண்டு 25ஆம் இலக்க விளையாட்டுச் சட்டத்தை திருத்தம் செய்வதன் மூலமோ அல்லது மேற்படி சட்டத்தை இரத்துச் செய்வதற்கான புதிய சட்டத்தை தயாரிப்பதன் மூலம் இந்த மாற்றங்களைச் செய்யலாம் என்றும் சட்ட உதவிகள் மற்றும் ஆலோசனைகளுடன் புதிய சட்டமூலத்தை தயாரிக்க முடியும் என்றும் குழுவின் ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## இனி இது .....

ஈடுபட்டனர். மாணவர் அமைப்பினர் தலைமையில் இந்தப் போராட்டம் நடந்தது. அவர்கள் ஆசிரியர் சங்கத் தலைவர் ஜங்கரனை அவரது அறையில் பூட்டி வைத்து அவரை நிந்தித்தனர். ''தமிழ்த் தேசியத்துக்காக நீ என்ன செய்திருக்கிறாய்" என்று கேட்டனர். மோசமான வார்த்தைகளால் திட்டினர். ஆளும் தரப்பினர் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் எலும்புத் துண்டுக்காக வாலாட்டுகிறவர்கள் என்று வைதனர். எனினும் இதே ஆசிரியர் சங்கத்தினர்தான் முல்லைத்தீவு நீதிபதியின் வெளியேற்றம், மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரைப் பிரச்சினை, கிழக்கில் போராட்டத்தின்போது கைது செய்யப்பட்ட போன்ற போராட்டங்களில் ஆட்சியாளர்களுக்கு எதிராக ஆளும் தரப்புக்கு எதிராக காத்திரமான அறிக்கைகளை வெளியிட்டிருந்தது. இருப்பினும் சுவஸ்திகா விடயத்தில் ஆசிரியர் சங்கத்தின் அறிக்கையை ஏற்க மறுத்த மாணவர்கள் கடுமையாக நடந்துகொண்டனர்.

இராசாயனவியல் துறையின் கண்ணாடிகள் சிலவற்றையும் உடைத்தனர். அங்கு படித்துக் கொண்டிருந்த மாணவர்களையும் விரட்டியடித்தனர். பின்னர் பல்கலைக்கழகத்தின் வாயில்களை இழுத்து மூடி எவரையும் உள்ளேயோ வெளியேயோ செல்லவிடாது தடுத்தனர். மாணவர்களின் தீவிரமான வன்முறை சார்ந்த போராட்டத்தைத் தொடர்ந்து தமது புதன்கிழமை அறிக்கையை திரும்பப் பெறுவதாக ஆசிரியர் சங்கம் அறிவித்தது. கருத்துச் சுதந்திரம் தொடர்பான தனது அறிக்கையை 24 மணி நேரத்திற்குள் அது திரும்பப் பெற்றுள்ளது.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்திற்கே கருத்துச் சுதந்திரம் இல்லை என்று நிரூபிக்கப்பட்டது. ஆசிரியர் சங்கம், மாணவர்களின் அழுத்தம் காரணமாகவே கருத்துச் சுதந்திரம் சார் தனது அறிக்கையைத் திரும்பப் பெறுகின்றது என்று தனது இரண்டாவது அறிக்கையில் குறிப்பிடும் சுதந்திரத்தைக்-கூட மாணவர்கள் ஆசிரியர் சங்கத்திற்கு வழுங்கவில்லை. "நீங்களாகவே முதல் அறிக்கையைத் திரும்பப் பெறுவது போன்றுதான் எழுத வேண்டும்'' என மாணவர்கள் வற்புறுத்தி - மிரட்டி - எழுத வைத்தனர்.

ஓர் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் இப்படி ஒரு தொகுதி மாணவர்களின் போராட்டத்திற்காக ஏன் இப்படி நடந்துகொண்டது என்று விசாரித்தபோது பல விடயங்கள் தெரியவந்தது. சுவஸ்திகா அருளிங்கத்திற்கு ஆதரவாக ஆசிரியர் சங்கம் ஓர் அறிக்கையை வெளியிட்டபோதே அதற்கு விரிவுரையாளர்கள் பலரும் ஆதரவாக இல்லை. ஆசிரியர் சங்க நிர்வாகத்திற்குள் இருந்தவர்களில் பலருக்கே இந்த விடயத்தில் மாற்றுக் கருத்து இருந்துள்ளது. மாணவர்களையும் அழைத்துப் பேசிய பின்னர் அறிக்கையை விடலாம் என்று அவர்கள் கூறியிருக்கின்றனர். ஆனாலும் அந்த அறிவுறுத்தல்கள் புறக்கணிக்கப்பட்டு புதன்கிழமை அறிக்கை வெளியாகி இருக்கின்றது.

பல்கலைக்கழகத்திற்குள் கருத்துச் சுதந்திரம் பேணப்படுவது மிக அவசியம், இல்லையேல் நாளை ஆளும் தரப்புக்கு ஆதரவான ஒரு துணைவேந்தர் பதவிக்கு வந்து அவர் புலிகள் பற்றிய எந்தவொரு நிகழ்வையும் நடத்தவோ பேசவோ கூடாது என்று தடுக்கக்கூடும், இன்று கருத்துச் சுதந்திரத்தை நாம் மதிக்கவில்லை என்றால் பின்னர் எப்படி தமிழர் தரப்பு நியாயங்களை வலியுறுத்த முடியும் என்பது ஆசிரியர் சங்கத் தரப்பினரின் வாதம். இருப்பினும் முறையாக அனைத்துத் தரப்பினருடனும் கலந்த பேசி அறிக்கையை வெளியிட்டிருக்கலாம் என்பது சங்கத்தின் நர்வாகக் குழுவில் இருந்த ஒரு பகுதியினரின் கருத்து.

இந்த நிலையில் நேற்று மாணவர்கள் போராட்டம் தீவிரமாகி, வன்முறை வடிவத்தை எடுத்த போது சங்கத்திற்கு உள்ளும் வெளியிலும் சங்கத்தினருக்கு கணிசமான ஆதரவற்ற நிலை காணப்பட்டுள்ளது. அத்தோடு மாணவர்களைக் கட்டுப்படுத்த பல்கலைக்கழக நிர்வாகமும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாணவர் ஒழுக்காற்றுக் குழு அதிகாரி, மாணவர்கள் செய்யும் போராட்டம் அவர்களின் உரிமை என்று விளக்கமளித்துள்ளார். துணைவேந்தர் சிறீ சற்குணராஜா கொழும்புக்குச் சென்றுவிட்ட நிலையில், நிர்வாகத் தரப்பிலிருந்து எந்தவொரு ஆதரவும் ஆசிரியர் சங்கத்திற்கு ஆதரவாகக் கிடைக்கவில்லை.

பதிலாக மாணவர்களின் மூர்க்கத்தைச் சிலர் தூண்டிவிட்டுக்கொண்டும் இருந்துள்ளனர். அத்தோடு மாணவர்கள் பல்கலைக்கழக வாயில்களை மூடியதும், மதிய உணவுக்குச் செல்ல முடியாத பலரும் பாடசாலைகளில் தமது பிள்ளைகளை ஏற்றுவதற்குச் செல்ல முடியாத பலரும் சங்கத் தலைவருக்கு அழைப்பெடுத்து தமது இக்கட்டுக் குறித்தும் நெருக்குதல்களைக் கொடுத்துள்ளனர். இவற்றுக்கு மேலாக பல்கலைக்கழகத்தில் சிங்கள மாணவர்களும் கல்வி கற்கும் நிலையில், தமிழ் மாணவர்களின் இந்த மூர்க்கத்தனம் எல்லைமீறி அதுவொரு தேவையற்ற மோதலுக்கு வழிவகுத்துவிடு-மோ என்கிற அச்சமும் ஏற்பட்டதால் ஆசிரியர் சங்கம் நிலமையைச் சமாளிக்க உடனடியாகத் தமது அறிக்கையை வாபஸ்பெறவது என்று தீர்மானித்தது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அறிக்கை வாபஸ் பெறப்படும் அறிக்கை வெளியானதைத் தொடர்ந்து நிலமை வழமைக்குத் திரும்பியது. இருப்பினும் பல்கலைக்கழகத்திற்குள் ஆசிரியர் சங்கத்திற்கே கருத்துச் சுதந்திரம் இல்லை என்பது பட்டவர்த்தமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. இத்தகைய நிலையில் சுவஸ்திகா அருளிங்கம் போன்றவர்களின் மாற்றுக்கருத்துக்களுக்கு இந்தப் பல்கலைக்கழகம் எப்படி இடமளிக்கும் என்று எதிர்பார்க்க முடியுமென ஏனைய பல்கலைக்கழகத்தினர் எள்ளி நகையாடுகின்றனர். இந்த நிலைமை அறிவுசார் நிறுவனம் ஒன்றிற்கு வெட்கக்கேடானது என்றும் அவர்கள் சாடுகின்றனர்.

ஆசிரியர் சங்கம் தீர ஆராய்ந்த பின்னர் அறிக்கையை விடுத்திருக்கலாம், இல்லையேல் தாம் விட்ட அறிக்கைக்காகப் போராடி இருக்கலாம். அப்படியில்லாமல் 24 மணி நேரத்திற்குள் அழுத்தங்களுக்கு அடிபணிந்து தமது அறிக்கையையே சங்கம் திரும்பப் பெற்றிருப்பது அது இதற்கு முன்னர் தமிழர்களுக்குச் சார்பாக விடுத்த அறிக்கைகளின் நம்பகத்தன்மையே கேள்விக்குள்ளாகி, பல்கலைக்கழகத்தின் 'இமேஜையே' மோசமாகப் பாதித்துள்ளது என்பது பெரும்பாலானவர்களின் கருத்து.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## நீதிமன்றங்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியின் நடவடிக்கை தொடர்பில் வெளியிட்ட கருத்துக்கள் என்பன எம்மை மிகுந்த விசனத்துக்கு உள்ளாக்கியிருக்கின்றன.

நீதிமன்றக் கட்டமைப்பின் சுயாதீனத்தன்மை என்பது சட்ட ஆட்சியின் அடிப்படைக் கோட்பாடாகத் திகழ்கின்றது. எனவே நீதிமன்ற சுயாதீனத்தன்மையில் ஏற்படுத்தப்படும் எந்தவொரு தலையீடும் மிகப்பாரதூரமானது என்பதுடன், அது நீதிமன்றத்தின் மீது மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையையும் மலினப்படுத்தும்.

சுதந்திர சமுதாயத்தில் சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்துவதற்கு நீதிமன்ற சுயாதீனத்தன்மை இன்றியமையாதது என் பதை நாம் எப்போதும் வலியுறுத்திவந்திருக்கின்றோம். அதேபோன்று நீதிபதிகளின் சுதந்திரமும், ஒவ்வொரு வழக்கிலும் உண்மையான தரவுகளை அடிப்படையாகக்கொண்டு பக்கச்சார்பற்ற தீர்மானங்களை மேற்கொள்வதற்கான இடைவெளியும், ஆட்சியாளர்கள் உள்ளடலங்கலான எந்தவொரு வெளியகத் தரப்பினரதும் தலையீடு இன்றி சட்ட ஆட்சியின் பாதுகாவலர்களாக அவர்கள் செயற்படுவதற்கான வாய்ப்பும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

இவ்வாறானதொரு பின்னணியில் நாடாளுமன்ற சிறப்புரிமைகளைப் பயன்படுத்தி தற்போது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கு தொடர்பில் கருத்துக்களை வெளியிடுவதும், நீதிபதிகளை மேற்கோள்காட்டி பேசுவதும் நீதிமன்றக் கட்டமைப்பின் சுதந்திரத்துக்கு நேரடி அச்சுறுத்தலாக அமையும் என்றே நாம் கருதுகின்றோம். இவ்விடயம் தொடர்பில் சட்டத்துறைசார்ந்தவர்கள் தொடர்ச்சியாகக் கரிசனைகளை வெளிப்படுத்தி வந்திருக்கின்றனர்.

அதேபோன்று நீதிமன்றக் கட்டமைப்பானது பொதுமக்களின் வலுவான நம்பிக்கையை அடித்தளமாகக்கொண்டே கட்டியெழுப்பப்பட்டிருப்பதுடன், சட்டத்துறை சார்ந்தோர் அந்த நம்பிக்கையை பாதுகாக்கவேண்டியது மிக அவசியமாகும்.

சட்டத்தரணியொருவர் தமது கட்சிக்காரரைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு சட்ட ரீதியாக உறுதிப்படுத்தப்பட்ட தொழில்சார் உரிமையைக் கொண்டிருப்பதுடன், அவ்வுரிமைக்கு ஏற்படக்கூடிய எந்தவொரு அச்சுறுத்தலும் அத்தொழில் மீது தாக்கத்தை ஏற்படுத்தும்.

அத்தோடு நீதிபதியின் செயற்பாடு தொடர்பில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட மிகமோசமான குற்றச்சாட்டு தொடர்பில் ஆராய்வதற்கு சுயாதீனமானதும், பக்கச்சார்பற்றதுமான நபர்கள் நியமிக்கப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாக இருக்கின்றது.

அவர்களின் விசாரணைகள் மூலம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் உண்மையென நிரூபிக்கப்பட்டால் நீதிமன்றத்தின் நேர்மைத்தன்மை கேள்விக்குட்படுத்தப்படும். அதேபோன்று அக்குற்றச்சாட்டுக்கள் பொய்யென நிரூபிக்கப்பட்டால் நீதிமன்றத்தின் சுயாதீனத் தன்மையைக் கேள்விக்குட்படுத்தும்.

எனவே அனைத்துத்தரப்பினரும் அரசலமைப்பின் ஊடாக உறுதிப் படுத்தப்பட்டுள்ள வரையறைகளின் பிரகாரம் செயற்படவேண்டும் எனவும், எவ்வகையிலேனும் நீதிமன்றத்தின் சுயாதீனத் தன்மையை உறுதிப்படுத்துமாறும் வலியுறுத்துகின்றோம் என்றுள்ளது.

## பலசரக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உலகிலேயே சிறந்த பலசரக்குகள் நம் நாட்டில்தான் இருந்தன. ஆனால், கடந்த 30, 40 ஆண்டுகளாக, பலசரக்குகள் துறையின் பின்னடைவால், மசாலா மூலம் நமக்கு வரும் வருமானம் குறைந்துள்ளது. இப்போது அது மாற வேண்டும்.

பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் கடன் நிலைத்தன்மையுடன், நாம் ஒரு போட்டி பொருளாதாரம் மற்றும் ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரமாக மாற வேண்டும். கடனை அடைக்க அதிக அன்னியச் செலாவணியை ஈட்டவேண்டும். மற்றும் எமது கையிருப்பில் சாதகமான நிலை இருப்பதை உறுதி செய்யவும் வேண்டும்.

பொருளாதார நடவடிக்கைகளில் அந்நியச் செலாவணியைக் கொண்டுவரும் போட்டித்தன்மை கொண்ட ஏற்றுமதிப் பொருளாதாரத்தில் கவனம் செலுத்த வேண்டும். அதன் முக்கிய துறைகளில் ஒன்றாக பலசரக்குகள் பொருள்களை அடையாளம் காணலாம்.

பண்டைய காலத்தில், இந்த நாட்டின் பொருளாதாரம் முக்கியமாக பலசரக்குகள் துறையைச் சார்ந்தது. நாம் பரந்த சந்தையில் கவனம் செலுத்த வேண்டும். அதற்காக எனது ஆட்சி ஏற்கனவே தலையிட்டுள்ளது. கறுவா அபிவிருத்திக்கென தனியான திணைக்களம் அமைத்துள்ளோம்.

மிளகு என்பது பண்டைய காலத்திலிருந்தே தோட்டத்தில்

தொடர்ச்சி 8ம் பக்கம்...



# ஜனாதிபதியின் பணிப்புரையினால் அங்கவீனர்களுக்காகப் புதிய சட்டம்

## அமைச்சர் அனுப பஸ்குவல் தகவல்



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரையின் பேரில் அங்கவீனமுற்றோருக்கான புதிய சட்டமூலமொன்றை கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் தெரிவித்தார்.

அங்கவீனர்கள் தொடர்ந்தும் தங்கி வாழ்வோர் என்ற மனநிலையில் இருக்க வேண்டிய சமூகமில்லை என்பதே அரசின் கொள்கை எனவும், அவர்களை இனிமேலும் இரண்டாம் தரப் பிரஜைகளாகக் கருதக் கூடாது என்றும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் -

சுமார் பதினாறு லட்சம் அங்கவீனர்கள் இதுவரை முறையாக சமூக மயப்படுத்தப் படவில்லை. ஜனாதிபதியின் முழுமையான வழிகாட்டல் மற்றும் ஆலோசனையின் பேரில் எதிர்வரும் வருடத்தில் அவர்களுக்கான வேலைத்திட்டத்தை நாம் சிறப்பாக நடைமுறைப்படுத்தவுள்ளோம். டிசெம்பர் மாதம் முதலாம் திகதி சர்வதேச அங்கவீனர் தினம் கொண்டாடப்படுகின்றது.

அதனையொட்டி ஓர் ஆரம்ப நிகழ்வாக அங்கவீன சமூகத்தையும் ஏனைய சமூகத்தைப்போன்று, வலுவூட்டுவதற்காகவும் அவர்களை அபிவிருத்திப் பணிகளில் இணைத்துக்கொள்ளவும், அதேபோன்று ஐக்கிய நாடுகள் சபையின் பிரமானங்களுக்கு ஏற்பவும் சுற்றுலாத் துறையில் அங்கவீன சமூகத்தை இணைத்துக்கொள்ளும் வகையில், ஈஎம்பிகியு 2023 என்ற தொனிப்பொருளில் நிகழ்ச்சியொன்றை ஆரம்பிக்கவுள்ளோம். கொழும்பு - கண்டி வரை அங்கவீனர்களுடன் பயணிக்கவுள்ளோம்.

எம்மைப் போன்று அவர்களுக்கும் அதே உரிமைகள், தொழில்நுட்ப வசதி வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். ரயில் கட்டமைப்பு உள்ளிட்ட முழுமையான பொதுப் போக்குவரத்துக் கட்டமைப்பிலும், மதஸ்தலங்களிலும் அங்கவீனர்களுக்கான பயண வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதை உறுதியாகத் தெரியப்படுத்துவதே இந்த கொழும்பு - கண்டி ரயில் பயணத்தின் விசேட நோக்கமாகும். மேலும் இந்த வேலைத்திட்டத்தை வருடாந்தம் நடத்துவதன் மூலம், சர்வதேச அளவில் அங்கவீனர்களும் சுற்றுலாப்பயணிகளாக இந்நாட்டுக்கு வருகை தருவதை ஊக்குவிக்க எதிர்பார்த்துள்ளோம்.

மேலும், அங்கவீனர்கள் தொடர்பான சட்டத்தை திருத்தி புதிய சட்டமொன்றைக் கொண்டு வருமாறு அங்கவீனமுற்றவர்கள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றார்கள். இது குறித்து பல்வேறு கருத்தாடல்கள் இடம்பெற்றாலும் கூட, இதுவரை இந்த சட்டத் திருத்தம் முறையாக நடைபெறவில்லை. எனவே சமூக வலுவூட்டல் தொடர்பான அமைச்சர் என்ற வகையில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரையின் பிரகாரம் எதிர்வரும் வருடத்தின் முதல் காலாண்டில் அது தொடர்பான பணிகளை நிறைவுசெய்து நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவுள்ளோம்.

முக்கியமாக அங்கவீனர்களுக்கான சட்டப் பாதுகாப்பு எவ்வாறு வழங்கப்படவுள்ளது என்பது குறித்து தெளிவுபடுத்தப்படவுள்ளதுடன், அடுத்த வருடத்தின முதல் காலாண்டில் இந்த சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அவசியமான பணிகளை முன்னெடுத்துள்ளோம்.

அங்கவீனர்களுக்கு தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுத்தல், கல்வி மற்றும் அபிவிருத்திப் பணிகளில் அவர்களை பங்கேற்கச் செய்தல் போன்ற பல்வேறு வேலைத்திட்டங்களை நாம் ஏற்கனவே ஆரம்பித்துள்ளோம். இதன் ஊடாக அவர்களைத் தொடர்ந்தும் தங்கி வாழ்வோர் என்ற நிலையில் இருந்து விடுபட்டு, இரண்டாம் தரப் பிரஜைகளாக அவர்களைக் கருதும் சூழலை மாற்றுவோம். மேலும், வலுவூட்டல் செயல்முறையுடன் அவர்களுக்கான ஓய்வூதிய முறை கட்டாயமாக்கப்பட வேண்டும் என்று உத்தேச வரவு செலவுத் திட்டத்திற்கான முன்மொழிவில் நாம் கூறியுள்ளோம். மற்றும் மாற்றுத்திறனாளிகள் தொடர்பான பாடநெறியை பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தில் உள்வாங் கவும் திட்டமிட்டுள்ளோம்.

அதன் ஊடாக அவர்களுக்கான தொழிநுட்பத் திறனுடன் கூடிய உபகரணங்களைத் தயாரித்தல் உட்பட அவர்களுக்கான ஏனைய வசதிகளை ஏற்படுத்தவும், அவர்கள் தொடர்பான மனப்பாங்கு மாற்றத்தை ஏற்படுத்தவும் எதிர்பார்த்துள்ளோம்.- என்று சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பெஸ்குவல் மேலும் தெரிவித்தார். (05)

# மலையகம் 200 நிகழ்வில் மு.க.ஸ்டாலினின் ஒளிநாடாவை ஒளிபரப்ப மறுத்தமை தமிழர்களுக்கு செய்த அவமானம்

## வே. இராதாகிருஷ்ணன் காட்டம்



மலையகம் 200 நிகழ்வில் தமிழ் நாட்டு முதலமைச்சரின் ஒளி நாடா அங்கு ஒளிபரப்பப்படாதமை மிகவும் கவலைக்குரிய விடயமாகும். அத்துடன் இந்த சம்பவம் தமிழர்களுக்கு செய்த அவமானமாகவே நாங்கள் பார்க்கிறோம் என எதிர்க்கட்சி உறுப்பினர் வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அமைத்தல் சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

மக்கள் பல்வேறு பொருளாதார நெருக்கடியில் இருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் அரசாங்கம் மக்களின் சொத்துக்களை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது. அரசியல் ஸ்திரமற்ற அரசாங்கமாக இருந்துகொண்டு பல்வேறு திணைக்களங்களை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றன.

அதன் பிரகாரம் 1894 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நுவரெலியா தபால் நிலையத்தை மக்களின் விருப்பம் இல்லாமல் வேறு ஒரு நிறுவனத்துக்கு விற்பனை செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். அந்த தபால் நிலையம் இலங்கையில் இருக்கும் மிகவும் பழைமைவாய்ந்த கட்டடமாகும். அதனால் அரசாங்கம் இது போன்ற நிகழ்ச்சி நிரல்களை நிறுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

அத்துடன் இந்த தபால் நிலையத்தை 2017ஆம் ஆண்டும் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அப்போது நாங்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து அதனை நிறுத்தினோம். தற்போது மீண்டும் குறித்த தபால் நிலையத்தை விற்பனை செய்யும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஜனாதிபதி அண்மையில் நுவரெலியாவுக்கு சென்று அங்கு மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் கலந்துகொண்டு, இந்த தபால் நிலையத்தை விடுவிக்க வேண்டும் இல்லாவிட்டால் நீங்கள் வீட்டுக்கு செல்லவேண்டும் என தபால்மா அதிபரிடம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஒருவர் அதிகாரிகளை இவ்வாறு அச்சுறுத்தும் வகையில் கதைக்கின்றமை எந்தளவு பொருத்தம் என நாங்கள் கேட்கிறோம். இஸ்ரேல் பிரதமரைப்போல் எமது நாட்டு ஜனாதிபதி இருக்கக்கூடாது என நாங்கள் தெரிவிக்கிறோம். ஜனாதிபதியின் இவ்வாறான செயற்பாடுகள் காரணமாக அரச அதிகாரிகள் ஜனாதிபதிக்கு எதிராக செயற்பட ஆரம்பித்துள்ளனர் எனத்; தெரியவருகிறது.

அத்துடன் கடந்த வாரம் மலையகம் 200 என்ற நிகழ்வை அரச நிகழ்வாக மேற்கொண்டிருந்தது. அதில் இந்திய நிதி அமைச்சர் கலந்துகொண்டிருந்தமை எமக்கு மகிழ்ச்சியாகும். என்றாலும் அந்த நிகழ்வில் தமிழ் நாட்டு முதலமைச்சரின் ஒளிநாடா அங்கு ஒளிபரப்பப்படாதமை மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

தமிழ் நாட்டில் 7 கோடி மக்களின் முதலமைச்சரின் ஒளிநாடாவை அந்த நிகழ்வில் ஒளிபரப்ப மறுத்திருப்பது தமிழர்களுக்கு செய்ய அவமானமாகவே நாங்கள் பார்க்கிறோம். இந்த செயல் அரசாங்கத்துக்கும் பாதிப்பாகும்.

அத்துடன் இந்த நடவடிக்கை தொடர்பாக தற்போது பல்வேறு விதமான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. - என்றார். (05)



# ஜனாதிபதி - ஸ்கொட் நாதன் சந்திப்பு: பொருளாதார சீரமைப்பு பற்றி ஆய்வு

அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஸ்கொட் நாதனுக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பின்போது சிறந்த ஆட்சி நிர்வாகத்தை அடிப்படையாகக்கொண்ட பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் தரமான முதலீடுகளை உள்ளீர்ப்பதற்கான முயற்சிகள் என்பன தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இலங்கையின் கொழும்பு துறைமுகத்தில் தெற்காசியப் பிராந்தியத்துக்கு மிகமுக்கியமான பங்களிப்பை வழங்கக்கூடிய ஆழ்கடல் கப்பல் கொள்கலன் முனையம் ஒன்றை அபிவிருத்தி செய்யும் பணிக்கு உதவுவதற்காக அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம் 553 மில்லியன் டொலர் நிதியுதவியை வழங்கியுள்ளது. இந்நிதியுதவி தொடர்பான அறிவிப்பை வெளியிடுவதற்காக சர்வதேச அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஸ்கொட் நாதன் இரண்டு நாள்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நாட்டை வந்தடைந்தார்.

இவ்விஜயத்தின்போது சுகாதார விஞ்ஞான சர்வதேச நிலையம், கொழும்புதுறைமுகம் போன்றவற்றைப்பார்வையிட்ட அவர், அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரிகளையும், தனியார் துறை முக்கியஸ்தர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

குறிப்பாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் இடம்பெற்ற சந்திப்பின்போது, சிறந்த ஆட்சி நிர்வாகத்தை அடிப்படையாகக்கொண்ட பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் தரமான முதலீடுகளை உள்ளீர்ப்பதற்கான முயற்சிகள் என்பன தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. அது மாத்திரமன்றி இலங்கையின் தனியார்துறை மேம்பாட்டை ஊக்குவிப்பதன் மூலம் அனைவரையும் உள்ளடக்கிய நாட்டின் வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதில் அமெரிக்கா அர்ப்பணிப்புடன்கூடிய கடப்பாட்டைக் கொண்டிருப்பதாக அந்நாட்டுத்தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று ஸ்கொட் நாதனுக்கும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின்போது, நாட்டின் பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கு இரு நாடுகளும் இணைந்து கூட்டாக முன்னெடுக்கக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டது. அத்தோடு ஜனநாயக ரீதியான மறுசீரமைப்புக்கள் மற்றும் நியாயமான சட்டங்கள் ஊடாக வளர்ச்சி மற்றும் சுபீட்சத்தில் நேர்மறையான மாற்றத்தை அடைந்துகொள்வது பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

அதேவேளைசக்திவலு அமைச்சர் காஞ்சன விஜேசேகர மற்றும் நாட்டின் தனியார்துறை வங்கிக்கட்டமைப்புக்களின் அதிகாரிகள் உள்ளிட்டோரையும் சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஸ்கொட் நாதன் சந்தித்துக் கலந்துரை யாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# இலங்கையில் அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தல் நடக்கும்

## அமெரிக்கா அபரிமித நம்பிக்கை



இலங்கையில் அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

உரிய நேரத்தில் தேர்தல்கள் இடம்பெறுவது ஜனநாயகத்திற்கு மிக அவசியமான விடயம் எனத் தெரிவித்துள்ள அவர், இதன் காரணமாக இலங்கையில் அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும் எனத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அரசமைப்பின்படி ஏனைய தேர்தல்களும் இடம்பெறும் என அமெரிக்கா நம்பிக்கை கொண்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தவிடயங்கள் அனைத்தும் மக்களிற்கான குரல்களை வழங்கும் அவர்கள் வாக்களிப்பின் மூலம் தங்கள் கருத்துக்களை வெளியிடமுடியும் தங்கள் தலைமையை தெரிவு செய்ய முடியும் என அமெரிக்கத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடம் நடைபெறவேண்டிய தேர்தல்கள் இடம்பெறும் என எதிர்பார்க்கின்றோம் சுதந்திரமான நியாயமான தேர்தல் இடம்பெறுவதை எதிர்பார்த்துள்ளோம். - என அவர் குறிப்பிட்டுள்ளார். (05)

காலைக்கதிர் Kalaikkathir


# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி - 021 222 3000

மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com

இணையம் - onlinekathir.com


## கருகிய நம்பிக்கை

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் அறிக்கையை வரவேற்று துளித்த நம்பிக்கை என்ற தலைப்பில்நேற்றுஎமதுகருத்தைப்பகிர்ந்துகொண்டிருந்த நிலையில் முளையிலேயே கருகிவிட்டது என்பதைப் போல 24 மணி நேரத்திற்குள் அந்த அறிக்கையைத் திரும்பப் பெற்று அதிர்ச்சியையும் அச்சத்தையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.**

**அரகலய போராட்டம் மூலம் பொதுவெளியில் அறியப்பட்டவரானசட்டத்தரணிசுவஸ்திகாஅருள்லிங்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆற்ற இருந்த உரை மாணவர்களில் ஒரு தரப்பினரின் அழுத்தம் காரணமாக கலைப்பீடாதிபதியால் தடுத்து நிறுத்தப்பட்ட விவகாரம்பெரும்சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. அது பல்கலைக்கழகத்தின் அறிவுசார் தகுதிநிலை குறித்த கேள்விகளையும் விமர்சனங்களையும் கடுமையாக எழுப்பியி–ருந்தது. மாணவர்கள் மற்றும் அறிவுசார் பேராசிரியர்களின் சகிப்புத்தன்மை குறித்த மிக மோசமான கண்ணோட்டத்தையும் ஏற்படுத்தியிருந்தது.**

**பல்கலைக்கழகதின் அறிவுசார் நடத்தைக்குச் சற்றும்பொருத்தமில்லாத – குறுகிய மனோநிலையைக் கொண்ட – இந்தச் செயற்பாடு மூலம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு ஏற்படுத்தப்பட்ட அபகீர்த்தியை நிவர்த்தி செய்யும் வகையில் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் ஓர் அறிக்கையை விடுதிருந்தது. சுவஸ்திகாவின் உரை தடுத்து நிறுத்தப்பட்டது தொடர்பில் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளபல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், அனைத்துத் தரப்பினரும் இணைந்து சுவஸ்திகாவின் உரை மீண்டும் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தியிருந்தது,**

**யாழ். பல்கலைக்கழகம் தனது அறிவுசால் புலமையையும்அறத்தையும்இழந்துவிடவில்லைஎன்கிற நம்பிக்கையை இந்த அறிக்கை ஏற்படுத்தியிருப்பதாக காலைக்கதிர் நேற்றுப் பாராட்டியிருந்தது. ஆனால் 24 மணி நேரத்திலேயே அப்படிப் பாராட்டியது தவறு என்று எண்ணவைத்துவிட்டது பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்.**

**தனது முன்னைய அறிக்கையில், ”மாணவர்களின் நெருக்குவாரத்துக்குப்பல்கலைக்கழகநிர்வாகம்பணிந்து சென்றமையும் ஒரு தவறான செயலாகும்’’ என்று தெரிவித்திருந்த யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் இப்போதுஅதேமாணவர்களின்நெருக்குவாரங்களுக்கும் அழுத்தத்துக்கும் பணிந்து தனது அறிக்கையை மீளப் பெற்றுள்ளது வேடிக்கையாகவும் ஏற்க முடியாததாகவும் இருக்கின்றது. தமிழ்ச் சமூகத்தின் அறிவுசார் நிலை குறித்துத் துளிர்விட்ட நம்பிக்கையைச் சிதைப்பதாகவும் அமைந்துள்ளது.**

**”எதிர்காலத்தில் இவ்வாறான செயல்கள் இடம்பெறாது இருப்பதனை மாணவர்களும், நிர்வாகமும் உறுதி செய்வதுஅவசியம். பல்கலைக்கழகம்என்பதுஅறிவுசார் கருத்துப் பரிமாற்றங்களுக்குரிய ஒரு களம். வெவ்வேறு பட்ட அரசியல், பொருளாதார நிலைப்பாடுகளையும், கருத்துக்களையும் எந்தத் தடைகளும் இல்லாத வகையிலே உரையாடுவதற்கும், விவாதிப்பதற்கும் உரிய வெளியும், சுதந்திரமும்பல்கலைக்கழகத்தினுள்இருப்பது பல்கலைக்கழகத்தின் அறிவுசார்செயன்முறைகளுக்கு மிகவும் அவசியம்’’ என்று சங்கத்தின் புதன்கிழமை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், அத்தகைய எந்தவொரு வெளியும் சுதந்திரமும் வெளியும் பல்கலைக்கழகத்திற்குள் இல்லை என்று நேற்றைய சம்பவம் நிரூபித்திருக்கிறது.**

**இது மிகவும் பாரதூரமான ஒரு நிலை. இது குறித்து யாழ். பல்கலைக்கழகக்கல்விச்சமூகம்மிகத்தீவிரமாகச் சிந்திக்கவேண்டும். இன்று மற்றையவர்களின் கருத்–துக்களைத் தெரிவிக்க இடமளிக்க மறுப்பதன் மூலம் நாளை எமது கருத்துக்களைத் தெரிவிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்படும் அவலத்தைத் தவிர்க்க இது விடயத்தில் உடனடியான, உரிய நடவடிக்கைகளைக் கற்றறிந்த சமூகம் எடுப்பது அவசரத் தேவை.**

# ரணில் கற்ற பாடம்

**என் சத்திய மூர்த்தி**



மேற்கு ஆசியாவில் அரங்கேறிவரும் இனப்போரைச் சுட்டிக்காட்டி, இங்கேயும் தமிழ்த் தலைமைகள், அரசையும் சர்வதேசத்தையும் சாடும் என்று எதிர்பார்த்தால், கதை வேறாக இருக்கிறது. தமிழர்களுக்குமாறாக, இலங்கை அரசே, அதுவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே இஸ்ரேல்– காஸா பிரச்சினையை கையில் எடுத்திருக்கிறார்.

இனப்பிரச்சினை விடயத்தில், சர்வதேசம், குறிப்பாக ஐ.நா. இஸ்ரேலுக்கு ஒரு நீதி, இலங்கைக்கு ஒரு நீதி என்று செயலாற்றுவதாக அவர் குற்றஞ்சாட்டி உள்ளார். அதாவது, ஒருகண்ணில் வெண்ணெய், ஒரு கண்ணில் சுண்ணாம்பு என்று அமெரிக்கா. செயல்படுகிறது என்று அவர் பொதுவெளியில் குற்றம்சாட்டி உள்ளார்.



இனப்பிரச்சினைசார்ந்துஐ.நா. விடயத்தில் தமிழர்களின் நிலை எதுவாக இருக்பினும், ரணில் சொல்வதிலும் ஓரளவு நியாயம் இருக்கிறது. அதிலும் குறிப்பாக அவர், ஐ.நா. மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளை மனதில் வைத்தே பேசுகிறார் என்ற உண்மையை உணர்ந்தோமானால், ரணில் ஏன், அவலை நினைத்து உரலை இடிக்கிறார் என்பதும் புரியும்.

ரணிலைபொறுத்தவரையில், அவருக்கு தற்போது முக்கியம் அவரது மேற்குலக நண்பர்கள் அல்லர். மாறாக, தென்னிலங்கை வாக்காளர்கள். ஒரு வருடத்திற்கு முன், நாட்டையும் பொருளாதாரத்தையும் காப்பாற்ற அவதாரம் எடுத்த தனி மனிதர் என்று மக்கள் அவரைக் கருதினார்கள். இப்போதோ, வழமை போல், பெரும் முதலாளிகளைக் காத்து, எழை மற்றும் நடுத்தர வர்க்கத்தினரின் வயிற்றில் அடிக்கிறார் என்ற எண்ணம் மீண்டும் உருவாகி உள்ளது. இருந்தாலும்ரணிலுக்குஇப்போது அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறுவது மட்டுமே குறிக்கோள்.

### பெருமளவு முதலீடு

அவரைப்பொறுத்தவரையில், சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்துகடனுதவிதொடர்ந்துபெற முடிந்தால், அதன் மூலம் நாட்டின் நிதி நிலைமையை சிறிதாவது தேர்தலுக்கு முன் சமன் செய்ய முடியும்என்று கருதுகிறார். அதன் அடிப்படையில், வெளிநாட்டுத் தொழில் முனைவர்கள் இங்கு பெருமளவில் மூதலீடுகளைச் செய்வார்கள் என்றும் எதிர் பார்க்கிறார்.

இந்த வெளிநாட்டு முடுதலீட்டாளர்களைப்பொறுத்தவரையில், நாணய நிதியத்தின் ஆதரவான அறிக்கை என்பது ஒரு கடனாளி நாடு, வசிஸ்டர் வாயால் பிரம்மரிஷி பட்டம் பெறுவதற்குச் சமம். ரணிலைப் பொறுத்தவரையில், அத்தகைய முதலீடுகள் மட்டுமே இங்கு வேலைவாய்ப்பை பெருக்கித் தனி மனிதர் மற்றும் குடும்ப வருமானத்தைப் பெருக்க உதவும். அரசிற்கும் வரிப் பணம் தேவைக்கான அளவு அதிகமாகும்.

இந்த இரண்டும் நடந்துவிட்டால், பின்னர் மக்கள் விலைவாசி உயர்வு, மின் கட்டண உயர்வு ஆகியவை குறித்து கவலைப்படமாட்டார்கள். அரசிற்கும் தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளை அவ்வப்போதாவது ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு நிதி நிலைமையில் முன்னேற்றம் ஏற்படும். அவ்வாறுரணில்நினைப்பது எல்லாம் நடந்து விட்டால், அவரேதான் அடுத்த ஜனாதிபதி.

இதில் ஒரு சிக்கல் உள்ளது. ரணில் தீட்டியுள்ள திட்டங்கள் செயல்பட்டுநாடுவளமானபாதையைநோக்கி நகர, குறைந்த பட்சம் ஐந்துஆண்டுகளாவது தேவைப்படும். பத்தாண்டுகளுக்குள் அந்த ஒளிவட்ட பாதை மக்களின்கண்களுக்கு தெரியுமேயானால், அதுவே அவரது கொள்கைகளுக்கும் அரசியலுக்கும் கிடைத்த பெருவெற்றி. ஆனால் ஜனாதிபதி தேர்தலோ அடுத்த ஆண்டே நடைபெற வேண்டும். அதில்தான்வெற்றிபெறவேண்டும் என்பதுரணிலின்ஆசை. பேராசை.

### பேரினவாத அரசியல்

இந்தபின்னணியில்,ரணிலின் அரசியல் நகர்வுகள் என்னவாகதான் இருக்க முடியும்? ஒன்று, பிரிந்து சென்ற சஜித் பிரேமதாசா தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி கட்சியிடம் இழந்த தனது ஐக்கிய தேசிய கட்சியின் வாக்குகளை மீள்பெறுவது. அதனை முதலீடாக வைத்து. தனது வெற்றிவாய்ப்பை பெருக்கிக்கொள்ள முயல்வது. ஆனால், தற்போதைக்கு அதற்கான சாத்தியகூறுகள் இருப்பதாகத் தெரியவில்லை.

இங்குதான், ரணிலின் பேரினவாத அரசியல் வெளிப்படுகிறது. இதுவரை, தமிழ் தரப்பினரிடமும்சர்வதேசத்திடமும்நல்ல பிள்ளையாக நடித்து வந்த அவர், தற்போது தனது முகமூடியை கிழிக்க வேண்டிய கட்டாயம் தோன்றி உள்ளது. தனக்கு சிங்கள-பௌத்த பேரினவாதிகளின் ஆதரவே தேவை என்று அவர் முடிவு செய்துவிட்டார். அல்லது, அவர்களின் எதிர்ப்பைச் சம்பாதித்துக் கொள்ளக்கூடாது என்பதில் அவர் தெளிவாகவே இருக்கிறார்.

கடந்த 2005 மற்றும் 2019 ஜனாதிபதித் தேர்தல்கள் ரணிலுக்கு ஒரு படிப்பினையைக் கற்றுக்கொடுத்தன. இரண்டுமே தமிழ் வாக்களர்களுடன் தொடர்புடைய விடயமே. மஹிந்த ராஜபக்சாவிற்கு எதிராக போட்டியிட்டு, 2005 தேர்தலில் தோல்வியை தழுவிய ரணில், விடுதலை புலிகள் அமைப்பு தமிழ் வாக்களர்களுக்கு இட்ட தேர்தல் புறக்கணிப்புகட்டளையே அதற்கு காரணம் என்று நம்பினார்.

அவரைப்பொறுத்தவரையில், தான்தமிழர்களுக்குஆதரவானவர் என்ற ’இமேஜ்’ அன்று இல்லாதிருந்திருந்தால், பேரினவாதிகளின் கணிசமான வாக்குகள் கிடைத்து, தான் வெற்றி அடைந்திருக்க முடியும் என்பதே அந்தத் தேர்தல் கொடுத்த பாடம். அந்த வாக்குகள் எதிர் வேட்பாளரான மஹிந்தவிற்குச் சென்றதால்தான் அவர் வெற்றி பெற்றார் என்பதும் அந்தத் தேர்தல் முடிவின் இன்னொரு அலகு.

இதற்கு நேர் எதிரான விடயம் 2019 தேர்தலில் அரங்கேறியது. அப்போது, ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கோத்தபாய ராஜபக் , தமிழர் வாக்குகளை நம்பாமலே, தமிழர் பகுதிகளில் தேர்தல் பரப்புரை செய்–யாமலே வெற்றிபெற்றார். அதாவது, தமிழர் வாக்கை நம்பி, இனப்பிரச்சினையில் தான் எந்தவொரு வாக்குறுதியும் கொடுக்கமாட்டேன் என்று அவர் செயல் மூலம் நிரூபித்தார். அதன் காரணமாகவும் அவருக்கு அதிக அளவில் பேரினவாதிகளின் வாக்குகள், சிந்தாமல், சிதறாமல் கிடைத்தன.

இதன் காரணமாகவும் தமிழர்களைவிட பேரினவாதிகளை நம்புவதே மேல் என்ற முடிவிற்கு ரணில் வந்திருக்கிறார் என்றே தோன்றுகிறது. ஆனால், அந்த வாக்குகளை மட்டுமே நம்பி தேர்தலில் வெற்றிபெற முடியாது என்பது வேறு விடயம். ஆனால், அந்த வாக்குகளை தனது பக்கம் ஈர்க்க வேண்டிய கட்டாயம் அவருக்கு.

### இரு பிரிவினர்

இந்தப் பின்னணியில், போர்குற்றங்கள் விடயத்தையும் பாலஸ்தினம் மீதான இஸ்ரேலின் தொடர் தாக்குதலையும் முடிச்சு போட்டு, அதற்காக அமெரிக்காவைச் சாடுவது, ரணிலின் தற்போதைய தந்திரம். அமெரிக்காவைச் சாடுவதன் மூலம், தென்னிலங்கை பேரினவாதிகளோடு, நகர்புற பேரினவாதிகளையும்தனதுஆதரவாளர்களாக மாற்றிக்கொள்ளலாம் என்பதே அவர் கணக்கு என்று தோன்றுகிறது.

தென்னிலங்கையின் அரசியல் விசித்திரமே, பேரினவாதிகள் இடையேயும் வலது, இடது என்று இரு பிரிவினர் இருப்பது தான். அவ்வாறுதான், ஜேவிபி மற்றும் அதில் இருந்து பிரிந்து சென்ற கட்சிகள் இடதுசாரி தேசியவாதம் பேசும் பேரினவாதக் கட்சிகள். வலதுசாரி அமைப்பான ஹெல உறமய வகையாறாக்களும் பேரினவாதக் கட்சிகளாகவே தங்களை அடையாளப்படுத்திக் கொண்டுள்ளன.

விடுதலை புலிகள் அமைப்பு இருந்த காலத்திலும் தமிழர் தரப்பிலும் வலது, இடது என சித்தாந்த வாதங்கள் இருந்தன. அதன் அடிப்படையிலேயே, கடும் போக்கு இடதுசாரிகள் போராளிகளாக அவதாரம் எடுத்தார்கள்.

ஆனால், விடுதலை புலிகள் அமைப்பு முழு வீச்சில் அவதாரம் எடுத்த பின்னர், வலது ஆவது, இடது ஆவது. எல்லாம் அவர்கள் வைத்த சட்டமே.

இந்த பின்னணியில்தான், தமிழர் பகுதிகளை பௌத்தமயமாக்கல் என்ற கோத்தாபயவின் ஆட்சி சார்ந்த அரசியல் முன்னெடுப்பை ரணில் தனதாக்கிக் கொண்டுள் ளார். அதற்காக மட்டும், பேரினவாதிகள் அவரைநம்பி வாக்களிப் பார்கள் என்பதல்ல பொருள். மாறாக, அதுவே மயிரைகட்டிமலையைஇழுக்கும் முயற்சி. அடித்தால் ரணிலுக்கு யோகம். அடிக்காவிட்டால், அவர் ஐயோ பாவம்! என்றாலும், அதனால் மட் டும் தமிழர்களின் தற்போதைய தலையெழுத்து மாறிவிடுமா, என்ன?

# வர்த்தகர் தினேஷ் சாப்டரின் உடலில் சைனட் கலக்கப்பட்டிருந்தமை சோதனையில் உறுதி

## நீதியமைச்சர் விஜயதாஸ கூறுகிறார்



வர்த்தகர் தினேஷ் சாப்டரின் உடலில் சைனட் கலக்கப்பட்டிருந்தமை பரிசோதனை அறிக்கை ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சைனட் உடலில் கலந்ததுடன் இறப்பு சம்பவிக்கும். இறந்ததன் பின்னர் கழுத்து மற் றும் முகப் பகுதிகளில் அழுத்தம் பிரயோகிப்பதற்கான அவசியம் என்ன வென்பதை துறைசார் நிபுணர்கள் நீதிம ன்றத்துக்கு எடுத்துரைக்க வேண்டும்.

இந்த அறிக்கைகள் சட்டமா அதிபருக்கு இதுவரை அனுப்பி வைக்கப்படவில்லை. அறிக்கை கிடைத்ததன் பின்னர் வழக்கு தாக்கல் செய்யப்படும் என நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர் வின் போது வர்த்தகர் தினேஷ் சாப்டரின் மரணம் தொடர்பில் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கை யில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

வர்த்தகர் தினேஷ் சாப்டரின் மரணம் நீதி மன்றவிசாரணைக்குஉட்படுத்தப்பட்டுள்ளதால் இவ்விடயம் தொடர்பில் நீதிமன்றத்தால் பகிரங்கப்படுத்தப்பட்ட மற்றும் பொதுப் படுத்தப்பட்ட விடயங்களை மாத்திரமே என்னால் குறிப்பிட முடியும்.

வர்த்தகர் தினேஷ் சாப்டரின் மரணம் தொடர்பில் பேராசிரியர் அசேல மென்டிஸ் தலைமையிலான ஐவர் அடங்கிய குழுவினர் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். இந்த குழுவில் நால்வர் ஒருமித்த கருத்தை முன்வைத்துள்ள பேராசிரியர் ருவன்புர மாறுபட்ட கருத்தை முன்வைத்துள்ளார்.

தினேஷ் சாப்டரின் கழுத்து மற்றும் முக பகுதியில் பிரயோகிக்கப்பட்ட அழுத்தம் அல்லது நெரித்தல் காரணமாக மரணம் சம்பவித்துள்ளது என நால்வர் முன்வைத்த கருத்துக்கு மாறுப்பட்ட வகையில் பேராசிரியர் ருவன்புர சாப்டரின் மரணம் சூட்சமமான ஒரு கொலை என்று குறிப்பிட்டுள்ளார்.

சாப்டரின் உடல்கூறுகளை கொண்டு முதல் குருதி பரிசோதனை, இரண்டாம் குருதி பரிசோதனை, வயிற்றுப் பகுதி மற்றும் வயிற்றுப் பகுதியில் இருந்த உணவுகூறுகள் மற்றும் நீதிம ன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட பிளாஸ்டிக் கோப்பை இரசாயன பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இரசாயன பகுப்பாய்வு திணைக்களம் சம ர்ப்பித்த பரிசோதனை அறிக்கையில் முதல் குருதி பரிசோதனையில் 6.9 மில்லிகிராம் சைனட் குருதியில் கலக்கப்பட்டிருந்ததாகவும், இரண்டாம் குருதி பரிசோதனையில் 2.9 சைனட் குருதியில் கலக்கப்பட்டிருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் வயிற்று பகுதி யில் இருந்து உணவு மற்றும் ஏனைய பகுதி களில் 4.9 சைனட் கலக்கப்பட்டிருந்ததாகவும், பிளாஸ்டிக் கோப்பையில் சைனட் அல்லது வேறுவிபதார்த்தங்கள் இருக்கவில்லைஎன்று அறிக்கை ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வர்த்தகர் தினேஷ் சாப்டரின் உடலில் சைனட் கலக்கப்பட்டிருந்தமை பரிசோதனை அறிக்கை ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சைனட் உடலில் கலந்ததுடன் மரணம் சம்பவிக்கும். மரணமடைந்ததன் பின்னர் கழுத்து மற்றும் முக பகுதிகளில் அழுத்தம் பிரயோகிப்பதற்கான அவசியம் என்ன என்பதை துறைசார் நிபுணர்கள் நீதிமன் றத்துக்கு எடுத்துரைக்க வேண்டும். இந்த அறிக்கை சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்படவில்லை. அறிக்கை கிடைத்ததன் பின்னர் வழக்கு தாக்கல் செய்யப்படும். - என் றார். (05)

# மது விருந்தில் கடற்படை சிப்பாயை ஆயுதத்தால் தாக்கிக் கொன்ற சகா

## திருமலை திஸ்ஸ கடற்படை முகாமில் சம்பவம்

திருகோணமலை திஸ்ஸ கடற்படை முகாமில் மதுபான விருந்து ஒன்றின்போது ஏற்பட்ட தகராறில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கடற்படைச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் மற்றுமொரு கடற்படைச் சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளார் என்று திருகோணமலை துறைமுக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் மாத்தளை கந்தேகெதர பகுதியைச் சேர்ந்த கே.எம்.தம்மிக்க சுவர்ணபண்டார (வயது - 36) என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரான கடற்படை வீரரும் அதே முகாமில் பணிபுரியும் மாத்தளை இம்புல்கொல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடையவர் ஆவார்.

புதன்கிழமை கடற்படைத் தளத்திலுள்ள மதுபான விடுதி யில் கடற்படையைச் சேர்ந்த நான்கு பேர் மதுபான விருந்து நடத்தியபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 390/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cococola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# கிரிக்கெட்டைப் பாதுகாக்க ஒன்றுபடுமாறு கூறும் எதிர்க்கட்சியின் அழைப்பு அரசியல் நோக்கானது

## அமைச்சர் பிரசன்ன சபையில் தெரிவிப்பு



ஒரு வருடத்திற்கு முன்னர் நாட்டு மக்கள் கஷ்டப்பட்ட போது பொருளாதாரத்தை கட்டியெழுப்ப ஒன்றுபடாத எதிர்க்கட்சியினர் கிரிக்கெட் விவகாரத்தில் அக்கறை காட்டி எம்மை ஒன்றுபடுமாறு அழைப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறோம். ஆனால் அதையும் அவர்கள் அரசியல் இலாபத்துக்கே செய்கின்றனர் என ஆளும் தரப்பு பிரமத கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற கிரிக்கெட் நிர்வாக சபையில் இடம்பெற்ற ஊழல்கள் தொடர்பில் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரொான் ரணசிங்கவின் உரையின் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கூறுகையில், கிரிக்கட் நிர்வாக சபை குறித்து இந்த நாடாளுமன்றத்தில் விவாதித்து தீர்மானம் நிறைவேற்றுவோம். ஊழல் நிறைந்த கிரிக்கட் நிர்வாக சபையை வீட்டுக்கு அனுப்ப அரசும் எதிர்க்கட்சியும் இணைந்து பாடுபடுவோம். நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளுக்கு மத்தியில் ஒளிந்து கொள்ளாமல் பணிகளை செய்வோம்.

இது தொடர்பாக பிரதமர் மற்றும் அரச தரப்பின் பிரதம கொறடா ஆகியோரிடம் கோரிக்கைவிடுக்கின்றோம். எதிர்க்கட்சிகளுக்கு மட்டுமன்றி, அரசும், எதிர்க்கட்சியும் இணைந்து இந்தப் பணியைச் செய்ய வேண்டும். இந்த ஊழல் கிரிக்கெட் நிர்வாகத்தை வீட்டுக்கு அனுப்புவோம். அதற்காக வித்தியாசம் பார்க்காமல் ஒன்றுபடுவோம். - என்றார்.

இதற்கு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பதிலளிக்கையிலே -

கிரிக்கெட் சபை திருடர்களின் கூடாரம் என நான் இந்த சபையில் செவ்வாய்க்கிழமை தெரிவித்தேன். அதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் எடுத்துள்ளார். நீதிமன்ற தீர்ப்பு குறித்து நான் பேசப்போவதில்லை. அந்த முடிவுகளை விமர்சிக்க எனக்கு உரிமை இல்லை.

இலங்கை கிரிக்கெட் சபை தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ள நாங்கள் தயார். விளையாட்டு அமைச்சரின் கருத்துடன் நாங்கள் உடன்படுகிறோம்.

ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் கிரிக்கெட்டை பயன்படுத்தி அரசியல் லாபம் பெற முயற்சிக்கிறார். கடந்த வருடம் நாட்டில் பாரிய பிரச்சினைகள் ஏற்பட்டன.

நாட்டின்பொருளாதாரத்தைக்கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணையுமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. அப்போது ஒன்றுசேராதவர்கள் அப்போது செய்தது போல் இப்பிரச்சினையிலும் அரசியல் லாபம் அடைய முயற்சிக்கின்றனர். -என்றார். (05)

# இலங்கை கிரிக்கெட் சபை இருக்கும் வீதிக்குப் பூட்டு



இலங்கை கிரிக்கெட் சபைக்கு முன்பாக உள்ள வீதியை நேற்று (வியாழக்கிழமை) தற்காலிகமாக மூடு வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதன்படி, டொரிங்டன் சந்தியில் உள்ள மைட்லாண்ட் வீதியிலிருந்து போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபைக்கு முன்பாக ஆர்ப்பாட்டங்களை தடுக்கும் வகையில் பொலிஸ் மற்றும் இராணுவ வீரர்கள் பாதுகாப்பில் ஈடுப்பட்டுள்ளனர். (05)

# துப்பாக்கி வெடித்து ஒருவர் உயிரிழப்பு

## கொஸ்வத்தையில் சம்பவம்

கொஸ்கம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்தில் கொஸ்வத்த அஸ்வத்த பகுதியில் புதன்கிழமை துப்பாக்கி வெடிப்புச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்றில் வெடிமருந்தை செலுத்திக் கொண்டிருந்தபோது துப்பாக்கி வெடித்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறுஉயிரிழந்தவர்கொஸ்கம அஸ்வத்த பிரதேசத்தின் புவக்பிட்டிய பகுதியில் வசிக்கும் 59 வயதுடைய நபராவார்.

இவர் தனது வீட்டில் தனியாக வசித்து வந்தார் என கொஸ்கம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கொஸ்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)



## பலசரக்கு....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

பயிரிடப்படும் பயிர். இதுபோன்ற இன்னும்பலபலசரக்குகள் உள்ளன. இவற்றை மேம்படுத்த இலக்கு மையப்படுத்தப்பட்ட திட்டம் மூலம் செயல்படவேண்டும்.

நம் நாடு மிக உயர்ந்த தரமான மற்றும் சுவையான கோபியை உற்பத்தி செய்கிறது. மேலும், நம் நாட்டில் கிடைக்கும் கொக்கோ சிறந்த வகைகளில் ஒன்றாகும் என்பது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்தப் பயிர்களுக்குத் தேவையான நிலத்தை வழங்க எமது ஆட்சி தயாராக உள்ளது. தனியார் நிலங்கள் அதிகமாக உள்ளன. இந்தத் துறையை மேம்படுத்த அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்.

புதிய தொழில்நுட்பத்துடன் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்திற்கு உடனடியாக செல்ல வேண்டும். இங்கு தனியார் துறையினரின் ஆதரவும் தேவை. பலசரக்குகள் துறையை மேம்படுத்துவதற்கான திட்டத்தை மசாலா சங்கத்தில் உள்ள அனைவரும் முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அதற்கு தேவையான ஆதரவை வழங்க நானும் அமைச்சரும் தயாராக உள்ளோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

## பணவீக்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விதிக்கப்பட்டிருந்த 50 சத வரியை 50 ரூபாவாக அதிகரிக்க நிதி அமைச்சு நடவடிக்கை எடுத்தது. இதன் ஊடாக நாட்டில் சீனியின் விலை அதிகரிக்கப்படுமாயின் அதன் மூலம் நுகர்வோர் பாதிக்கப்படுவார்கள். எனவே அதனைத் தடுப்பதற்காக சீனிக்கு கட்டுப்பாட்டுவிலையைநிர்ணயிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

நாட்டில் உற்பத்திகள் நுகர்வோரைச்சென்றடையும்அளவுதொடர்பில் நாம் தற்போது ஆய்வுகளை நடத்தி வருகின்றோம். உதாரணமாக நாட்டில் மேற்கொள்ளப்படும் பால் உற்பத்தியில் நேரடியான நுகர்வுக்காக பயன்படுத்தப்படும் பாலுக்கு மேலதிகமாக பால் சார்ந்த உற்பத்திக்காகவும் பால் பயன்படுத்தப்படுகின்றது. பால் விலை அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக இது போன்ற தொழில் முயற்சியாளர்கள் இந்த பால்சார் உற்பத்திகளில் இருந்து விலகிக்கொள்கின்றனர்.

இதன் காரணமாக நாட்டின் தேவைக்காக நாம் பால் சார் உற்பத்திகளை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்கின்றோம். உதாரணமாக பால் மாவைக் குறிப்பிடலாம்.இதற்காகபெருமளவில் அந்நியச் செலாவணியை நாம் வழங்குகின்றோம். இது தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டு எமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு மீன்பிடி அமைச்சு, கமத்தொழில் அமைச்சு மற்றும் கால்நடைகள் அமைச்சுபோன்றஅமைச்சுகளுக்கு தெரிவித்துள்ளோம்.

இவ்வாறான பல்வேறு பொருட்கள்தொடர்பில்நாம்தற்போது அவதானம்செலுத்திவருகின்றோம். நாட்டில்மேற்கொள்ளப்படும்உற்பத்தி, அந்த உற்பத்திகளில் நாட்டினுள் விநியோகிக்க எதிர்பார்க்கும் அளவு, அடுத்த வருடத்தில் அவற்றின் விலைகள் தொடர்பில் எமக்கு அறிக்கையளிக்குமாறு நாம் அமைச்சுகளுக்குஅறிவித்துள்ளோம்.

உதாரணமாகநெல்உற்பத்தியை எடுத்துக்கொண்டால் சிறு போகம், பெரும் போகம் ஆகிய இரு போகங்களினதும் விளைச்சல், அவற்றில் விநியோகிக்கப்படும் நெல்லின் அளவு மற்றும் அதன் விலைகள் தொடர்பிலும் அரிசியின் விலைகள் குறித்தும் கணிப்பிட்டு எமக்கு அறிவிக்குமாறு தெரிவித்துள்ளோம். இதன் ஊடாக நாட்டில் உணவுப் பாதுகாப்பை எவ்வளவு தூரம் எம்மால் பேணமுடியும் என்றும் அடுத்த வருடத்தில்எவ்வாறு விலைகளைக் கட்டுப்படுத்தலாம் என்றும் விலைகள் குறித்து எமக்கு ஒரு தெளிவைப் பெற்றுக்கொள்ளவும் எதிர்பார்க்கின்றோம்.

இதன் மூலம் அடுத்த வருடத்தில் நாட்டில் உள்ள அத்தியாவசியப் பொருட்களின் கையிறுப்பு, அதன் விலைகள் குறித்தும் நுகர்வோருக்கு உத்தரவாதம் ஒன்றை வழங்கவும் எம்மால் முடியும். சில நேரம் பொருட்களில் தட்டுப்பாடுஏற்படுமாயின் இறக்குமதி செய்தேனும் அப்பொருட்களின் விலையை கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும். இது குறித்த தரவுகள் எம்மிடம் இருக்குமாயின் அதனை அடிப்படையாக வைத்து இந்த தீர்மானங்களை எடுக்க முடியும். இந்தக்கணைக்கெடுப்புகளை நாம் தற்போது மேற்கொண்டு வருகின்றோம். அவை கிடைத்தவுடன் 2024 ஆம் ஆண்டு தொடர்பில் நாம் ஒரு அறிக்கையை வெளியிடவுள்ளோம்.

இந்தவரவுசெலவுத்திட்டத்துடன் நாட்டின் உணவுப் பாதுகாப்புக் குறித்துபாரியவேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதுடன், அடுத்த வருடம் இந்த விலைகளை மேலும் குறைக்கமுடிவதுடன்,உணவுப்பணவீக்கத்தை குறைக்கவும் முடியும் என்றும் நான் நினைக்கின்றேன்.' என்று வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நலின் பெர்னாண்டோ மேலும் தெரிவித்தார்.

## இலங்கை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பாடுகள் அடங்கிய சட்டமூலம் நாடாளுமன்றத்தில்நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

அமைச்சர்நிமல்சிறிபாலடிசில்வா இது தொடர்பான பிரேரணையை உறுதிப்படுத்தினார். இதனையடுத்து எதிர்க்கட்சிகள் வாக்கெடுப்பை நடத்துமாறு கோரிக்கை விடுத்தன. ஆனால் ஆளும் தரப்பினர் குறித்த பிரேரணையைநிறைவேற்றுவதற்கு தாம்ஆதரவளிப்பதாகஅறிவித்தனர். இதனால் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன பிரேரரையை சபையின் ஏகமனதான அங்கீகாரத்துடன் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அறிவித்தார்.

எனினும் எதிர்கட்சியினர் வாக்கெடுப்பை நடத்துமாறு வலியுறுத்திகோசங்களைஎழுப்பினார்கள். அதன்போது இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் மற்றும், ஆளும் கட்சியின் பிரதம கொரடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகியோர் எதிர்க்கட்சி இந்தப் பிரேரணையை முன்மொழிந்தது. ஆளும் கட்சி அதனை உறுதிப்படுத்தி வழிமொழிந்தது. ஆகவே இதனை நிறைவேற்றுவதில் எமக்கு ஆட்சேபனை இல்லை. மக்கள் விடுதலை முன்னணியைக் காணவில்லை. எதிர்கட்சியில் யாராவது எதிர்க்கின்றார்களா என்பதைக் கேளுங்கள்அவ்வாறில்லாதுவிட்டால் ஏகமனதாகநிறைவேற்றலாம்என்று குறிப்பிட்டனர்.

இந்நிலையில் மீண்டும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன குறித்த பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக அறிவித்துசபையைஒத்திவைத்தார்.

## கிரிக்கெட் சபை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பரிமாற்றம் செய்யப்பட்டமை தொடர்பில் விளையாட்டுத்துறை அமைச்சர் தெரிவித்த கருத்துக்களை தெளிவுபடுத்த வேண்டியது அவசியமானதாகும்.

அந்தவகையில், இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தனது கணக்கிலிருந்து மூன்றாந்தர கணக்கொன்றுக்கு பணத்தினை மாற்றுவதற்கு முயற்சிப்பதாக வெளியிடப்பட்ட கூற்றை முற்றாக நிராகரிக்கின்றோம்.

மேலும், கிரிக்கெட் நிறுவனத்திற்கான நிதியானது டொலர்களில் கிடைப்பதால் அந்த தொகைகளை டொலர் கணக்குகளிலேயேவைப்பிடப்பட்டுகையாளப்படுகின்றது.

இருப்பினும், உள்நாட்டில் கொடுப்பனவுகளின்போது ரூபாவிலேயே கணக்குகளை கையாள்வதால் இடையிடையே ரூபாவில் டொலர்கள் மாற்றப்படுகின்றன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## கிரிக்கெட்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனை சட்டமா அதிபரிடத்தில் வழங்கினோம். இருந்தபோதிலும் வழக்கு விசாரணை நடைபெறுகின்றது.

ஆகவே சிறந்த விடயமாக இப்போதிருப்பது என்னவென்றால் சித்திரசிறி அறிக்கையைப் பெற்று அதனை நடைமுறைப்படுத்த வேண்டும். எனக்குத் தெரிந்த வகையில் இடைக்கால நிர்வாக சபைகளை நியமிப்பதன் ஊடாக பயன் கிடைக்காது. அவை பிளாஸ்டர்கள் போன்றவை. அதனால் பயனில்லை.

அனைத்து குழப்பகரமான நிலைமைகளின்போதும் இடைக்கால நிர்வாகங்கள் நியமிக்கப்பட்டன. முழுமையாக சட்டத்தினை மாற்றுவது அதனைவிடவும் இலகுவானதாகும். அதனையே செய்ய வேண்டும்.

விசேடமாக கூறுவதாக இருந்தால் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவே கிரிக்கெட்டை ஆதரித்தார். பாடசாலைகள் அணி என்னிடத்தில் ஒப்படைக்கப்பட்டது.

அதன் மூலமே அணியொன்று முன்னோக்கி வந்து 1996ஆம் ஆண்டு உலக கிண்ணத்தினை இலங்கை அணி வெற்றிபெற்றது.

அந்த வழிமுறைகளை பின்பற்றியே கிரிக்கெட் விளையாட்டை மேம்படுத்த வேண்டியுள்ளது. அது தொடர்பிலான சபையொன்றை ஸ்தாபிக்க வேண்டும். நான் அன்றிலிருந்து எந்தவொரு பக்கத்தினையும் சாரவில்லை. எனக்கு ஒருபக்கமே உள்ளது.

இலங்கை கிரிக்கெட்டை மேம்படுத்த வேண்டும். அதற்காக அதிகாரிகளுக்கு ஆட்சியாளர்கள் என்றவகையில்ஒத்துழைப்புவழங்க வேண்டியது அவசியமானதாகும்.

இந்த இடத்தில் எனக்கு அச்சமொன்று உள்ளது. ஐ.சி.சி.யுடன் எஸ். எல்.சி. கதைத்துள்ளது. அதற்கு முரணாக நாம் செயற்படக்கூடாது. எனினும், தற்போது நாடாளுமன்றத்தில் பிரேரணையை நிறைவேற்றிக்கொள்ளுங்கள். அதுசிறந்ததாகும். பின்னர் நாம் சட்டங்களை முன்வைப்போம் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# வெளிநாடுகளுக்கான புதிய தூதுவர்கள் வடமாகாண ஆளுநருடன் நேற்று சந்திப்பு





வெளிவிவகார அமைச்சால் புதிதாக நியமிக்கப்பட்ட பல வெளி நாடுகளுக்கானஉயர்ஸ்தானிகர்கள் மற்றும் தூதுவர்கள் வட மாகாணத்துக்கு கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டிருந்தபோது வட மாகாண ஆளுநர் செயலகத்தில் வட மாகாண ஆளுநர் பி.எஸ். எம். சார்ள்ஸை சந்தித்துக் கலந்துரையாடினார்.

தற்போதைய அரசாங்கத்தின் கீழ் வட மாகாண மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் மாகாணத்தை அபிவிருத்தி செய்யவும் நீண்ட மற்றும் குறுகிய கால வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்த ஆளுநர், அந்த வேலைத்திட்டங்களுள் வட மாகாணத்தில் 25,000 நிரந்தர வீடுகளை நிர்மாணிப்பது, சூரிய சக்தி மூலம் மின்சாரம் தயாரிப்பதுதொடர்பானதிட்டங்களின் முன்னாயத்தவேலைகள்ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் குறிப்பிட்டார்.

இதன்போது, புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தூதுவர்கள் மற்றும்உயர்ஸ்தானிகர்களுக்கு வடமாகாணத்தின் தற்போதைய நிலைமைகள்,மக்களின்அன்றாட நடவடிக்கைகள், அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஆளுநர் விளக்கமளித்தார்.

இந்த கலந்துரையாடலானது வட மாகாண மக்களின் வாழ்வை கட்டியெழுப்பும் அபிவிருத்தித் திட்டங் களுக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தூதுவர்கள்மற்றும்புதியஆணையாளர்களின் ஆதரவை பெறும் நோக்கிலேயே இடம்பெற்றது.

இந்தசந்திப்பின்போது,ஆளுநரின்தலைமையில்மாகாணமக்களுக்கு ஆற்றிவரும் சேவையை பாராட்டிய புதிய தூதுவர்கள், எதிர்காலத்தில் வடக்கின் அபிவிருத்திக்காக தாம் கடமை புரியும் நாடுகளின் ஆதரவை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தனர்.

மேலும், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நேரடி பயணிகள் படகு சேவைகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டமை, எதிர்காலத்தில் மன்னாருக்கும் இந்தியாவுக்கும் இடையிலான படகு சேவைத்திட்டங்கள், மீன்பிடி, விவசாயம், நீர்ப்பாசனம், கிராமிய பொருளாதார நடவடிக்கைகள் போன்றவை பற்றியும் வட மாகாணத்தின் வளங்களைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் செய்யக்கூடிய சாதகமான, ஆக்கபூர்வமான திட்டங்கள் குறித்தும் பேசப்பட்டது.

தற்போதைய ஆளுநரின் நியமனத்தின் பின்னர், வட மாகாணத்தின் அபிவிருத்தி மற்றும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளுக்கும்மீண்டும்பாராட்டுதெரிவித்த புதிய தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள், வட மாகாண அபிவிருத்திக்கு அந்தந்த நாடுகளிடமிருந்து அதிகபட்ச ஆதரவை வழங்குவதாக உறுதியளித்தனர். (05)

---

## சித்ரசிறி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல உறுப்பினர்கள் உயர்நீதிமன்ற நீதியரசர் கே.ரி.சித்திரசிறியின் அறிக்கைக்கு அமைவாக புதிய யாப்பொன்று கிரிக்கெட் சபைக்காக தயாரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளனர். மேல்நீதிமன்றம்பிறப்பித்துள்ளமூன்று தடை உத்தரவுகள் உள்ளன.

முதலாவது தடை உத்தரவு என்னவென்றால், 20-20 உலக கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இடம்பெற்றுள்ள ஊழல் மோசடிகள் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி சரோஜி வீரவர்த்தன வழங்கிய பரிந்துரைக்கு அமைவாக சட்டத்தினை நடைமுறைப்படுத்துவது தடுக்கப்பட்டுள்ளது. இந்தத்தடுப்பானது, இடைக்காலத் தடை உத்தரவின் ஊடாக விதிக்கப்பட்டுள்ளது.

சித்திரசிறியின் அறிக்கைக்கு அமைவாக புதிய யாப்பொன்றை தயாரிப்பதற்கு விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் தீர்மானித்தார். அதே நீதிமன்றம் அதற்கும் தடை விதித்துள்ளது. இது இரண்டாவது தடை உத்தரவாகும். இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இரண்டு மாதங்கள் கடந்த பின்னரும் அது நடைமுறையில் உள்ளது.

மூன்றாவதாக, அமைச்சர் நியமித்த இடைக்கால நிர்வாகக் குழுவினை செல்லுபடியற்றதாக்கும்உத்தரவையும் நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

அந்த வகையில், கே.ரி.சித்திரசிறியின் அறிக்கைக்கு அமைவாக புதிய யாப்பினை தயாரிக்க வேண்டுமென இங்கு யோசனை முன்வைக்கப்பட்டது. கிரிக்கெட் விளையாட்டைபுதியயாப்பின்கீழ்கொண்டுவர வேண்டுமெனமுழுநாடாளுமன்றமும் யோசனையை முன்வைத்துள்ளது. எனினும்,அந்தஅறிக்கைக்குநீதிமன்றம் தடை விதித்துள்ளது. அதனையடுத்து அமைச்சரின் தீர்மானத்திற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தஇடத்தில்தான் கிரிக்கெட் சிக்கியுள்ளது என்றார்.

## தீர்மானம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதவியில் தொடர்வார்கள். ஆகவே இந்த விடயத்தில் நிறைவேற்று அதிகாரமும், நீதித்துறையும் எம்முடன் இணைந்து கொள்ளவேண்டும். அதன் மூலமாகவே இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தின் ஊழல், மோசடிகளையும், அதில் சம்பந்தப்பட்டவர்களையும் வெளிப்படுத்த முடியும் என்றார்.

இதனையடுத்து எழுந்த ஆளும் தரப்பின் பிரதம கொரடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, நாங்கள் பிரேரணையை நாள் முழுவதும் விவாதித்து நிறைவேற்றினாலும், கிரிக்கெட் சபையின் நிர்வாகம் பதவி விலகாது என்று பிரேரணையைச் சமர்ப்பித்த எதிர்க்கட்சித் தலைவரே கூறுகின்றார். இதனால்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரசிங்க கூட்டத்தின்போது விரைவாகபுதியசட்டத்தினைஅமுலாக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

## பல்கலைக்கழக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றைய தினம் மருதானை புகையிரத நிலையத்திற்கு ஒன்று கூடிய பல்லைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்ட பேரணி காரணமாக கொழும்பு 10 இல் உள்ள டீன்ஸ் வீதியை பொலிஸார் மூடினர். இதனால் டீன்ஸ் வீதி மற்றும் அதனை அண்டிய வீதிகளில் கடுமையான போக்குவரத்து நெரிசல் காணப்பட்டது.

இந்த நிலையில் ஆர்ப் பாட்டமானது கோட்டையை நோக்கி நகரமுற்பட்டபோது, மருதானை தொடருந்து நிலையத்துக்கு அருகில் வைத்துபேரணியைக்கலைப்பதற்காக பொலிஸார் கண்ணீர்ப்புகை குண்டுத் தாக்குதலை நடத்தினர். நீர்த்தாரைப் பிரயோகத்தையும் செய்தனர்.

## வாகன....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போக்குவரத்து சேவைகளுக்கான வாகனங்களை இறக்குமதிசெய்வதற்கு வழங்கப்பட்ட ஒரு மாத கால அவகாசம் நிறைவடைந்துள்ளது.

அனுமதி வழங்கப்பட்ட மாதத்திற்குள் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களை விடுவிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. எனினும் எதிர்காலத்தில், எந்தவொரு வாகனத்தையும் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

அத்துடன், வாகன இறக்குமதி தொடர்பான அறிக்கையை தயாரிப்பதற்காக ஜனாதிபதி செயலகம் விசேட குழுவொன்றை நியமித்துள்ளது. குறித்த குழுவின் அறிக்கையினை ஆராய்ந்தே அடுத்தகட்ட முடிவுகள் எடுக்கப்படவுள்ளன.மேலும், வாகனங்களின் தேவைகள், வீதிகளுக்கான இட வசதி, எரிபொருள் செலவு போன்றவற்றில் விசேட கவனம் செலுத்தப்படுகின்றது என்றார்.


## யாழ். பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் விரிவாகி, மாணவர்களால் பல்கலைக்கழக வாயில் கதவுகள் இழுத்து மூடப்பட்டன. இவ்வாறு மாணவர்கள் கொடுத்த அழுத்தம் காரணமாகவே ஆசிரியர் சங்கம் தனது முன்னைய அறிக்கையைத் திரும்பப் பெறுவதாகத் தெரிவித்தது.

---

# ஐந்தாவது தேசிய இளைஞர் நாடாளுமன்ற 4 ஆவது அமர்வு



தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஐந்தாவது தேசிய இளைஞர் நாடாளுமன்றத்தின்நான்காவதுஅமர்வு 2023 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 28 மற்றும் 29 ஆம் திகதிகளில் ஜனாதிபதி செயலகத்தின் பழைய நாடாளுமன்ற மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

'2024வரவுசெலவுத்திட்டத்திற்கான இளைஞர் முன்மொழிவுகள்' என்றதொனிப்பொருளின்கீழ்முதல் நாள் விவாதம் நடைபெற்றதோடு இரண்டாவது நாள் விவாதம் 'காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் இலங்கை இளைஞர்களின் பங்கு' என்ற தொனிப்பொருளில் நடைபெற்றது.

முதல் நாள் அமர்வில் பிரதம அதிதிகளாக இளைஞர் விவகார விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் ரோஹன திசாநாயக்க மற்றும் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தலைவர்ஃ பணிப்பாளர் நாயகம் பசிந்து குணரத்ன ஆகியோர் கலந்து கொண்டதுடன், இரண்டாவதுநாள், பிரதம அதிதிகளாக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரொஷான் ரணசிங்க, மற்றும் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின்தலைவர்/பணிப்பாளர் நாயகம் பசிந்து குணரத்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும், விசட அதிதிகளாக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கே. மகேசன், சட்டக்கல்லூரி அதிபர் கலாநிதி அதுலபத்திநாயக்க, தேசிய இளைஞர் சேவை மன்ற பணிப்பாளர் பிரதீப் மாபலகம ஆகியோர் கலந்துகொண்டனர்.

இங்கு உரையாற்றிய தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தலைவர்/பணிப்பாளர் நாயகம் பசிந்து குணரத்ன, தேசிய இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அதிக மதிப்பளிக்கும் வகையில், நாடாளுமன்ற சட்டமூலமொன்றின் ஊடாக இளைஞர் நாடாளுமன்றத்தை ஸ்தாபிக்க ஜனாதிபதியின் பணிப் புரையின் பேரில் கடந்த அமர்வில் அவர் வழங்கிய





வாக்குறுதியை நடைமுறைப்படுத்துவதற்கான இறுதிக்கட்ட நடவடிக்கைகள்இந்தநாள்களில்முன்னெடுக்கப்பட்டு வருவ தாகவும், அந்தச் சட்டத்தின் மூலம் அடுத்த இளைஞர்நாடாளுமன்றத்திற்கான உறுப்பினர்கள் நியமிக்கப் படுவார்கள் என்றும் தெரிவித்தார்.

மேலும், அரசியல், நாடாளுமன்ற மரபுகள், சர்வதேச உறவுகள் போன்ற பாடங்களை உள்ளடக்கிய விசேட டிப்ளோமா பாடநெறியொன்றைஅறிமுகப்படுத்துவதற்காக தேசிய இளைஞர் அரசியல்விஞ்ஞானநிறுவனத்தை நிறுவுவதாக தாம் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற அனைத்துஏற்பாடுகளும்தற்போது தயாராக உள்ளன என அவர் தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரொஷான் ரணசிங்க, தேசிய நாடாளுமன்றத்திற்குதெரிவுசெய்யப்படும் பிரதிநிதிகள் எதிர்காலத்தில் உரிய முறையில் பயிற்சியளிக்கப்பட வேண்டுமெனவும், உத்தேச இளை ஞர் நாடாளுமன்ற சட்டம் மற்றும் அரசியல் விஞ்ஞான அக்கடமி மிகவும் காலத்திற்கேற்ற நடவடிக்கைஎனவும்தெரிவித்தார். அதன் மூலம் எதிர்காலத்தில் அறிவாற்றலுள்ள மக்கள் பிரதிநிதிகள் குழுவை நாட்டுக்கு வழங்க முடியும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மேலும், இளைஞர்களை தொழில் முனைவோராக வலுவூட்டுவது காலத்தின் தேவை என சுட்டிக்காட்டிய அமைச்சர்,இன்றுஇந்நாட்டுஇளைஞர்கள் எதிர்நோக்கும் பலமான பிரச்சினையான வேலையில்லாத் திண்டாட்டத்தை இல்லாதொழிக்க இதுஉதவும்எனவும்தெரிவித்தார்.

மேலும், ஜனாதிபதி மற்றும் அமைச்சரின் ஆலோசனையின் பேரில், வரவு செலவுத் திட்ட முன்மொ ழிவுகள் தொடர்பில் இளைஞர்களின் கருத்துக்கள் ஆராயப்படும் எனவும் அடுத்த இளைஞர் நாடாளுமன்றத்தை எதிர்வரும் நவம்பர் மாதம் 18ஆம் மற்றும் 19ஆம் திகதிகளில் பழைய நாடாளுமன்ற மண்டபத்தில் நடாத்து வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனஎன இளைஞர் சேவை மன்றத்தின் தலைவர்/பணிப்பாளர் நாயகம் பசிந்து குணரத்ன மேலும் தெரிவித்தார். (05)




# இந்த ஆண்டு கேதார கௌரி விரதத்தை நிறைவு செய்வது எவ்வாறு?

புராணச்சிறப்பு மிக்க கேதாரகௌரி விரதம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சதுர்த்தசி திதியில் புராணோக்தமாக நிறைவடையவுள்ளது. எனினும் எமது இலங்கை வழக்கில் மறுநாள் திங்கட்கிழமை (13.11.2023) நிறைவு பெறுகிறது.

இந்த விரதம் வளர்பிறை அஷ்டமி முதல் தேய்பிறை சதுர்த்தசி வரை அனுஷ்டிக்க வேண்டும் என்பது புராணச் செய்தி. ஆனால், வழக்கத்தில் நவராத்திரி நிறைவு பெற்ற தசமி முதல் அமாவாசை வரை அனுஷ்டிக்கப்படுகிறது.


பொதுவாக வரலக்ஷ்மி விரதம், கேதார கௌரி விரதம், காரடையா நோன்பு போன்றவை வீடுகளில் செய்யப்படும் விரத வழிபாடுகளே ஆயினும், இலங்கையில் அவை ஆலய வழிபாடுகளாகவே பெரிதும் இருந்து வருகின்றன.

முக்கியமாக கேதாரகௌரி விரதம் அனுசரிக்கும் பல்லா-யிரம் அடியவர்கள் இலங்கையில் உள்ளனர். அவர்கள் குறித்த விரத வழிபாடுகளை ஆலயங்களில் சிவாச்சார்யர்களின் வழிகாட்டலிலேயே மேற்கொள்கின்றனர்.

அவர்கள் இல்லத்தில் கேதாரேஸ்வர பூஜை எவ்வாறு செய்யலாம் என விபரிப்பதே இப்பதிவின் நோக்கமாகும். ( ஏற்கனவே சிவபூஜை செய்பவர்களுக்கான பதிவன்று. புதிதாக அன்று செய்பவர்களுக்குரிய எளிய பதிவே இதுவாகும்)

மேலும் சிவாச்சார்யார் வழி காட்டலில் கோயில்களில் தான் நீங்கள் பூஜை செய்தாலும் அப்போது வியத்தை உள் உணர்ந்து செய்யவும் இது உதவலாம்.





முதலில் தூய்மையாகி, பூஜை செய்யும் இடத்தையும் தூய்மைப்படுத்திக் கொள்ளுங்கள். பூஜைக்குரிய பொருட்களை தயார் செய்து கொள்ளுங்கள். 21 வெற்றிலை, பாக்கு, பழம், அதிரசம் (அரியதரம்) போன்ற நெய்வேதனங்களையும் எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். இரண்டு கும்பங்களை வைத்து வலது பக்கம் சிவபெரு மானையும் இடது பக்கம் பார்வதி யையும் கும்பங்களில் எழுந்தருள செய்து வழிபடலாம்.

இல்லாவிடில் ஒரு கும்பம் வைத்து அதில் அம்பிகையையும் புற்றுமண்ணில் லிங்கம் அமைத்து அதில் பரமேஸ்வரனையும் வழிபடலாம். மண் லிங்கத்திலேயே சிவ சக்தியை ஒரு சேரவும் வணங்கலாம். அந்த வாய்ப்பும் இல்லாதவர்கள் சிவன்- அம்மன் படத்தை வைத்து விளக்கேற்றி வழிபடலாம்.

மும்முறை தலையில் குட்டி பிள்ளையாரை வணங்கி சங்கல்பம் செய்து கொண்டு தூய நீரால் சுத்தப்படுத்திக் கொண்டு தீபம் ஏற்றி துதிகளை சொல்லி வழிபாடு செய்ய வேண்டும். மஞ்சளில் ...இப்போது மஞ்சளுக்கு பெருந்தட்டுப்பாடு ஆதலில், ஏதோ ஒரு வகையில் பிள்ளையாரை வழிபடல் வேண்டும்.

இருபத்தொரு முடிச்சிட்ட நோன்பு நூலை லிங்கத்தின் மேல் அல்லது கும்பங்களின் மேல் அல்லது படத்தில் சாற்றி வழிபடலாம். சிவ பெருமானுக்கு உகந்த அஷ்டோத்திரசத நாமாவளி, லிங்காஷ்டகம் போன்ற சம்ஸ்கிருத தோத்திரங் களையும் திருமுறை, காப்பு பாடல் போன்றவற்றையும் பாடலாம். காப்பு நூலில் உள்ள ஒவ்வொரு முடிச்சையும் (கிரந்தியையும்)



**1. சிவாய நம:**
**2. வாஹாய நம:**
**3. மஹாதேவாய நம:**
**4. வ்ருபத்வஜாய நம:**
**5. கௌரீசாய நம:**
**6. ருத்ராய நம:**
**7. பசுபதயே நம:**
**8. பீமாய நம:**
**9. திரியம்பகாய நம:**
**10. நீல லோஹிதாய நம:**
**11. ஹராய நம:**
**12. ஸ்மர ஹராய நம:**
**13. பவாய நம:**
**14. சம்பவே நம:**
**15. சர்வாய நம:**
**16. சதாசிவாய நம:**
**17. ஈஸ்வராய நம:**
**18. உக்ராய நம:**
**19. ஸ்ரீ கண்டாய நம:**
**20. நீல கண்டாய நம:**
**21. கேதாரேஸ்வராய நம:**

என்ற இருபத்தொரு நாமங்களால் 21 பூக்கள்/ வில்வத்தால் அர்ச்சனை செய்தல் வேண்டும். பின்பு இறைவன் - இறைவிக்கு தூபம், தீபம் காட்டி நெய்வேதனம் சமர்ப்பிக்க வேண்டும். நிறைவாக காப்பை எடுத்து,

**ஆயுஸ்ய வித்யாம்ச ததா சுகம் ச**
**ஸௌபாக்ய ம்ருத்திம் குரு தேவ தேவ/**
**ஸம்ஸார கோராம்புநிதௌ நிமக்நம்**
**மாம் ரக்ஷ கேதார நமோ நமஸ்தே//**

என்ற சுலோகத்தை சொல்லி பிரார்த்திக்க வேண்டும்..

பின்னர் வீட்டிலுள்ள வயது முதிர்ந்த சுமங்கலிப்பெண் கையால் அல்லது கணவன் கையால் நூலை இடது கையில் பெண்கள் கட்டிக் கொள்ள வேண்டும். கோயில்களில் குரு ஸ்தானத்தில் இருக்கும் சிவாச்சார்யார் காப்பு கட்டி விடுவ-தும் மரபு வழி ஏற்புடையதே. நிறைவாக, பூஜைக்கான தக்ஷிணையை அருகிலுள்ள குருவிடம் அல்லது அந்தணரிடம் சமர்ப்பிக்கலாம். இது ஓரளவு சுலபமாக பூஜையை வீட்டில் செய்யும் முறைமை ஆகும். இதற்கும் வசதியற்றவர்கள் திருமுறைகளை பாடி வழிபாடு செய்வதும் ஏற்கத்தக்கதே.

கேதாரகௌரியுடன் வந்தருளும் கேதார நாயகர்- அர்த்த நாரீஸ்வர இறை அருளால் நோயும் துயரும் அகலட்டும். இன்பமே பெருகட்டும் என பிரார்த்திப்போம்.

பிரமஸ்ரீ. தி. மயூரகிரி சிவாச்சார்யார்

# சைவ வழிபாட்டு மரபுகள்

அரிது அரிது மானிடராதல் அரிது என்றார் ஔவைப்பாட்டி கிடைத்தற்கரிய மானிடப்பிறவி நமக்குக் கிடைத்திருக்கின்றது. அதை தக்கபடி பயப்படுத்துவதே அறிவுடைமை ஆகும். அதற்கான வழிவகைகளை சைவ சமயம் வகுத்துத் தந்துள்ளது. அதுவே சைவ நெறியாகும் . நெறி என்பதற்கு வழி என்று பொருள்படும் நாம் வாழும் வாழ்வு சைவ நெறிபட்ட வாழ்வு சைவ வாழ்வு ஆகும். சைவம் வழிப்படுத்துகின்ற வாழ்கை நெறி ஆசாரத்தோடு கூடியது. ஆசாரம் என்றால் ஒழுக்கம் என்ற பொருள்படும் ஆசாரம் 2 வகைப்படும். ஒன்று அக ஆசாரம் மற்றயது புற ஆசாரம் ஆகும். அக ஆசாரம் உள்ளத்துடன் சம்மந்தப்பட்டது புற ஆசாரம் உடலோடு சம்மந்தப்பட்டது ஆதலால் ஆசாரம் சைவ வழிபாட்டு மரபில் முக்கி இடம் பெறுவதைக் குறிப்பிடலாம்.

அதுமட்டுமன்றி சைவம் வலியுறுத்தும் இறை உணர்வு, அற உணர்வு , கடமை உணர்வு , சமுதாய உணர்வு என்பன ஆதாரமாக அமைகின்றன. அதாவது கடவுளை வழிபடும் முறைகளை நமது சமயம் தெளிவாக எடுத்துரைத்துள்ளது. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று சொல்லப்படும் சைவ நாற்பாதங்களை சமய குரவர்கள் நமக்கு

வகுத்துத் தந்துள்ளார்கள். அதுவுமன்றி பல்வேறு மார்க்கங்களையும் நமக்குத் தந்துவிட்டுசென்றுள்ளார்கள். அகப்பூசையிலே இறைவனுக்கு அட்ட புஸ்பங்களான கொல்லாமை ஐம்பொறியடக்கம் , பொறுமை, இரக்கம், அறிவு, தவம், உண்மை, அன்பு என்பவற்றை சாத்துகின்றோம். சுவாமி விபுலானந்தர் இறைவன் உவக்கும் இன்மலர்களாக உள்ளக்கமலம், கூப்பியகைக்காந்தன் நாட்டவ விழி நெய்தல் என்பவற்றையும் நமக்கு வகுத்த்தந்துள்ளார்.

இந்து மதத்தில் முதன் முதலில் பக்தி மரபு ஏற்படுத்திய புராணம் ஆன்மீக ஈடேற்றம் பெறுவதற்குரிய வழி பற்றியும் எடுத்துக் கூறியுள்ளனர். அதாவது தல யாத்திரை , தீர்த்த யாத்திரை , யாகம் , தவம், தியானம், தோத்திரம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். குறிப்பாக புராணங்களிலே தக்கனின் யாகம் பற்றி சிறப்பாக எடுத்துக்கூறப்பட்டது. அதாவது கலியுகத்தில் தவம் ஒன்றே தன்னை அடைவதற்கு சிறந்த வழி என சிவபெருமான் கூறியதாக சிவ புராணத்தில் எடுத்துக்கூறப்பட்டுள்ளது.

மேலும் உமாதேவியார் தவமிருந்து சிவனை அடைந்தமை பற்றி லிங்கபுராணம் கூறுகின்றது. மற்றும் திருமாள் சிவனை நோக்கி தவமிருந்து சங்கரா யுதத்தை பெற்றமை பற்றி விஸ்ணு புராணத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. மற்றும் அர்ச்சுனன் சிவனை நோக்கித் தவமிருந்து பாசுபாதயுதத்தை பெற்றமை பற்றி எடுத்துக் கூறப்பட்டது. புராணங்களில் வழிபாட்ட முறையில் ஒன்றாகிய தியானம் பற்றியும் எடுத்துக் கூறப்பட்டது. உதாரணமாக 'சிவ புராணத்தில் செப யாகம் செய்வதை விட தியானம் உயர்ந்தது எனக் கூறப்பட்டுள்ளது. 'கூர்மபுராணம் ஆயிரம் யாகம் செய்வதை விட தியானம் சிறந்தது' எனக் கூறுகின்றது. மேலும் சைவம் விரதம் பற்றியும் கூறியுள்ளது. அதாவது ஆறுமுகநாவலர் 'இந்தச்சரீரம் கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்தி இன்பம் பெறும் பொருட்டேயாம்' எனக்கூறியுள்ளார். ஆகையால் இறைவனை விரதம் அனுட்டித்தும் வழிபடலாம் எனக்கூறப்பட்டுள்ளமை தெளிவாகிறது. வராகபுராணம், மச்சயபுராணம் என்பவற்றிலும் விதங்களின் மகிமை பற்றி எடுத்துக்கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அது மட்டுமன்றி சைவ விழுமியங்கள் மூலம் சைவம் பற்றி அறிய முடிகிறது. சைவ விழிமியங்களாக அன்புடமை, வாய்மை, பணிவுடமை, அடக்கமுடமை, செய்நன்றி மறவாமை முதலானவற்றைக் குறிப்பிடலாம். 'அன்பும் சிவமும் இரண்டென்பர்' எனத்திருமூலர் திருமந்திரத்தில் குறிப்பிட்டுள்ளார் வாய்மைக்கு எடுத்துக்காட்டுகளாக அரிச்சந்திரன் மகாத்மாகாந்தி ஆகிய இருவரையும் குறிப்பிடலாம். மேலும் குருலிங்க சங்கம வழிபாடு பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. குரு என்றால் பாசத்ததை நீக்குபவர் அஞ்ஞானம் என்னும் இருளை அகற்றுபவர் என்பது பொருளாகும். அப்படியான குருவழிபாட்டை வழிபட்டவர்களான சமயக்குரவர் சந்தானக்குரவர் திருமூலர் அப்பூதியடிகள் மங்கையற்கரசியார் குலச்சிறையார் ஆகியோரைக்குறிப்பிடலாம். இவர்கள் நமக்குத் திரு வழிபாட்டை வகுத்துத் தந்துள்ளனர். இலிங்க வழிபாட்டை சேரமான் பெருமான் சாக்கிய நாயனார் கலங்காமர் பூசலார் முதலானோர் மேற்கொண்டனர். இவர்கள் நமக்கு இலிங்க வழிபாட்டை வகுத்துத் தந்துள்ளனர். சங்கமம் என்பது சிவனடியார்கள் கூட்டம் எனப்படும். அந்த சிவனடியார்கள் சங்சம வழிபாட்டை மேற்கொண்டனர். அதாவது அப்பூதியடிகள் திருநீலகண்டன் இயற்பகையார் சிறுதொண்டர். இளையான் குடிமாற நாயனார் என்போரைக் குறிப்பிடலாம். மேலும் வைணவ வழிபாட்டு மரபு என்பது ஆகமம் சாரா வழிபாடு மூலமும்; காணப்படுகின்றது. அதாவது அவற்றை சிறு தெய்வ வழிபாடு என்றும் அழைப்பர். இங்கப் படையலிடல் பலியிடல், தீமிதித்தல், கூத்து போன்ற சடங்குகள் நிகழ்த்தப்படும் இந்த சடங்கு முறை தற்காலத்திலும் காணப்படுகின்றது. உதாரணமாக பாண்டியிருப்பு உடப்பு முற்றல் போன்ற இடங்களில் திரௌபதை அம்மன் வழிபாடு காணப்படுகின்றது.

அடுத்து கோமம் சார் வழிபாட்டு முறை பற்றி சைவ வழிபாட்டு மரபு குறிப்பிடுகின்றது. இங்கு பெரு தெய்வ வழிபாடு இடம்பெறும். ஆகையால் இறைவனின் ஐந்தொழில் களையும் உணர்த்தும் முகமாக மாகோற்சவம் நடைபெறுகின்றது. அங்குரார்ப்பணம் கொடியேற்றம் இராசாபத்தனம் முதலியன படைத்தலைக் குறிக்கும். இரதோஸ்ணவம் துர்ணோத்சவம் முதலியன அழித்தலைக் குறிக்கும். மௌனோற்சவம் மறைதலையும் தீர்த்த்திருவிழா அருளலையும் குறிக்கும். எனவே மேற்குறிப்பிடப்பட்ட அனைத்தும் விடங்களிலும் சைவ வழிபாட்டு மரபுகளை நாம் கடைப்பிடித்து வாழ வேண்டும். இதனால் இறையுணர்வு ஏற்படும் துன்பம் அகன்று விடும் எங்கும் எதிலும் அன்புமே நிலவும் மனம் புத்தி முதலியன தூய்மை அடையும் ஞானம் கைகூடும்.

குணராஜா பானுஜா
யா/ சென். திரேசா மகளிர் கல்லூரி

# ஓட்டோ சாரதி உள்ளிட்ட முறைசாராத் துறைகளில் பணியாற்றுவோரின் நலன் தொடர்பில் நடவடிக்கை

## அமைச்சர் மனுஷ தெரிவிப்பு



முறைசாரா துறையில் பணியாற்றுபவர்களுக்கு தொழில் கௌரவத்தை வழங்குவது மற்றும் அவர்களின் தொழில் ரீதியிலான நலன்கள் குறித்தும் நீண்ட காலமாக பேசப்பட்டபோதிலும் சட்ட ரீதியிலான நடவடிக்கைகள் இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை. அதற்கு வழிவகுக்கும் பொருட்டு 'கரு சரு' திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

அத்தோடு, நாட்டில் பிரச்சினைகள் குறித்து பேசுபவர்கள் பலர் இருக்கின்றனர். தீர்வுக்கு எவரும் முன்வரவில்லை. விமர்சனங்கள் தீர்வாவதில்லை என்பதாலேயே நாட்டின் பிரச்சினைகளை தீர்க்க ஜனாதிபதி அனைவரையும் ஒன்றிணைத்தார். பிரச்சினைகளுக்கு பயந்து அவற்றை தீர்க்க முடியாது. இவ்வாறான நிலையில்தான் நீண்ட காலமாக இந்த முறைசாரா துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் தொடர்பிலான விடயங்களுக்கு தீர்வாக இந்த வேலைத்திட்டத்தை எமது அமைச்சு மேற்கொண்டுள்ளதுஎன்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும் அவர், எதிர்வரும் ஜனவரி மாதமளவில் மேற்கொள்ளப்படவுள்ள புதிய தொழில் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் முறைசாரா துறையில் பணியாற்றுபவர்களுக்கான ஒழுங்குறுத்தலையும் நடைமுறைப்படுத்த எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார். முறைசாரா சேவையில் ஈடுபட்டுள்ளோரின் தொழில் கௌரவத்தை மேம்படுத்துவதற்கான 'கருசரு' என்ற வேலைத்திட்டத்துக்கு பொது மக்களின் கருத்துக்களை கேட்டறிவதற்கான தொடர் செயல் அமர்வின் முதலாவது அமர்வு புதன்கிழமை தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கேட்போர் கூடத்தில் ஆரம்பமானது. அமைச்சர் மனு நாணயக்காரவின் எண்ணக்கருவுக்கு அமைவாக, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு, முறைசாரா சேவையில் ஈடுபட்டுள்ளோரின் தொழில் கௌரவத்தையும், அவர்களின் நலன்களையும் முன்னிலைப்படுத்தி 'கரு சரு' என்ற வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த செயலமர்வில் அமைச்சர் மனு மேலும் தெரிவிக்கையில் –

ஓட்டோக்களைச் செலுத்துவோர் தனியார் பஸ் சாரதி, பஸ் நடத்துநர், ஏனைய பிரிவு போக்குவரத்து சாரதிகள், கட்டுமான பொறியியலாளர்கள், கட்டுமான பொறியியலாளர் உதவியாளர்கள், வீட்டுப் பணிப்பெண் சேவையில் ஈடுபட்டுள்ளோர், அலங்கார கலைஞர்கள், சுய தொழிலில் ஈடுபட்டுள்ளோர் ஆகியோரின் தொழில் கௌரவத்தையும், பாதுகாப்பையும், அவர்கள் தொழில் ரீதியாக வரவேற்கப்படுவதையும் மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

நாட்டில் இன்று 6 மில்லியனுக்கும் மேற்பட்டோர் முறைசாரா துறையில் பணியில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் நாட்டின் பொருளாதாரத்துக்கும் பெரும் பங்களிப்பை வழங்கி வருகின்றனர்.

அரச மற்றும் தனியார் துறைகளில் ஈடுபட்டுள்ளோருக்கு தொழில் ரீதியிலான கௌரவம் அல்லது தொழில் அடிப்படையிலான எந்தவித ஒழுங்குறுத்தலும் இல்லை.

அரசாங்க ஊழியர்களுக்கென ஓய்வூதியம் உண்டு. தனியார் துறை ஊழியர்களுக்கு சேமலாப நிதி, ஊழியர் பாதுகாப்பு நிதி போன்ற நலன்கள் உள்ளன.

ஓட்டோக்களை செலுத்துபவர்கள், நெசவாளர்கள், பெயிண்டர்கள், மின்சார வல்லுநர்கள் உட்பட அனைத்து துறைகளிலும் உள்ளவர்கள் பொருளாதாரத்துக்கு பாரிய பங்களிப்பை வழங்குகின்றனர். ஆனால், அவர்களின் தொழிலுக்கு மரியாதை இல்லை. அதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதனால் முழு நாட்டிலும் உள்ள அனைத்து தொழில் வல்லுநர்களுக்கும் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள அமைச்சரவை எனக்கு விசேட அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சிலர் ஈ.பி.எவ். இல் கைவைக்க வேண்டாம் என்று கூச்சல் போடுகின்றனர். ஆனால், உண்மை அதுவல்ல. தற்போது ஊழியர் சேமலாபநிதி உள்ளிட்ட சமூகப் பாதுகாப்புத் திட்டங்களில் இரண்டு மற்றும் மூன்று மில்லியன் மக்கள் அங்கம் வகிக்கின்றனர்.

மேலதிகமாக, இந்த நாட்டின் அனைத்து உழைக்கும் மக்களையும் ஒரு சமூகப் பாதுகாப்புத் திட்டத்துக்குள் கொண்டு வருவதற்காக இந்தப் புதிய செயற்பாடுகளை நாம் முன்னெடுத்து வருகிறோம்.

வெளிநாடுகளிலுள்ள இவ்வாறான ஊழியர்கள் தொடர்பில் எங்களால் பேச முடியும் என்றாலும், நம் நாட்டில் உள்ள அனைவருக்கும் தொழில் கண்ணியம் தேவைப்படும் வேலைத்திட்டத்தை வழங்க எவரும் முன்வரவில்லை. இவர்களின் ஓய்வூதியத்துக்கும், ஏதேனும் விபத்து ஏற்பட்டால் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கவும் அமைப்பு ஏற்படுத்த வேண்டும். அதற்குத் தேவையான வேலைத்திட்டம் 'கரு சரு' திட்டத்தின் மூலம் செயற்படுத்தப்படவுள்ளது.

இன்று ஆரம்பமாகும் இந்த அமர்வில் தமது தொழில் ரீதியாக ஓட்டோக்களை செலுத்துவோர் விடயத்தை எடுத்துக்கொண்டுள்ளோம். நீண்ட காலமாக இந்த விடயம் குறித்து பலர் பேசினார்கள். ஆனால், இன்னும் இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

முச்சக்கரவண்டி சேவையானது இந்த நாட்டில் உள்ள லட்சக்கணக்கான மக்களை பிறப்பு முதல் இறப்பு வரை இணைக்கும் ஒருதவிர்க்க முடியாத சேவையாகும்.

நாட்டில் முச்சக்கரவண்டிச் சேவையை பெறாத ஒருவரை கண்டுபிடிக்க முடியாது. மேல் மாகாண சபை இதற்கான ஆரம்பகட்ட வேலைகளை நிறைவு செய்துள்ளதாக அறிகின்றோம். இதற்கான சட்டத்தில் திருத்தம் செய்ய போக்குவரத்து அமைச்சும் ஏற்பாடு செய்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.


அதன்படி, முதற்கட்ட பணிகள் முடிவடைந்த பின், தொழில் ரீதியாக ஓட்டோ ஓட்டுபவர்கள் யார் என்பதைக் கண்டறிய முடியும். இவர்களை பதிவு செய்த பின், தொழில்முறையான நிறுவனத்தை உருவாக்கி, அவர்களின் ஆலோசனைகளுடன் அவர்களுக்கு உரிய மரியாதையுடன் ஓய்வு பெறும்போது, தேவையான பாதுகாப்பை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் மனுஷ நாணயக்கார மேலும் தெரிவித்தார். (05)

# மயிலத்தமடு செல்லமுயன்ற மனித உரிமை செயற்பாட்டாளர் பொலிஸ் சோதனை சாவடியில் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளார்

மயிலத்தமடுவிற்கு செல்ல முயற்சி செய்தவேளை பொலிஸாரும் இராணுவத்தினரும் தன்னை சோதனை சாவடியில் தடுத்து நிறுத்தியுள்ளதாக மனித உரிமைகள் செயற்பாட்டாளர் ருக்கி பெர்னாண்டோ ருவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

மயிலத்தடு கால்நடைபண்ணையாளர்கள் காணி விவகாரம் குறித்து எழுதுவதற்கான தகவல்களை பெறுவதற்காக ஊடகவியலாளர்களுடன் சென்றவேளை பொலிஸ் இராணுவ சோதனைசாவடியில் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளேன்.

நேற்று (வியாழக்கிழமை) காலை 10 மணியிலிருந்து அங்கு நிற்கின்றேன் - கரடியானாறு பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி, கிழக்கு மாகாணத்திற்கான சிரேஸ்ட பொலிஸ்மா அதிபர், மனித உரிமை ஆணைக்குழு



போன்றவர்களுடனும் தொடர்பு கொண்டுள்ளேன் என ருக்கி பெர்னாண்டோ பதிவிட்டுள்ளார். (05)

# வர்த்தக நிலைய உரிமையாளரிடம் இலஞ்சம் கேட்ட தொழில் திணைக்கள அதிகாரி கைது

பனாகொட பிரதேசத்திலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் பணிபுரியும் ஐந்து ஊழியர்களை, ஊழியர் சேமலாப நிதியுடன் இணைக்காமல் வர்த்தக நிலையத்தை நடத்திச் செல்வதற்காக 400,000 ரூபாவை வர்த்தகரிடம் இலஞ்சமாக கோரினார் என்ற குற்றச்சாட்டில் தொழில் திணைக்களத்தின் அதிகாரி ஒருவரை கைது செய்ததாக அதுருகிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வர்த்தக நிலையத்தில் பணிபுரியும் 5 ஊழியர்களுக்கு 11 லட்சம் ரூபாவை ஊழியர் சேமலாப நிதியாக செலுத்த வேண்டியுள்ளதாகவும், அத்தொகையை செலுத்தாமல் இருக்கத் தேவையான ஏற்பாடுகளைச் செய்வதற்காக நான்கு லட்சம் ரூபாவை இலஞ்சமாகக் கோரியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நவகமுவ, ரணால பிரதேசத்தை சேர்ந்த, தொழில் திணைக்களத்தின் கள அதிகாரி என கூறப்படும் 54 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (05)

# அம்பாறையில் பற்றி எரிந்தது தென்னந்தும்பு தொழிற்சாலை

அம்பாறை-நவகம்புர பிரதேசத்தில் அமைந்துள்ள தென்னந்தும்பு தொழிற்சாலை ஒன்றில் தீ பரவியுள்ளது.

தீயணைப்பு பணியில் இலங்கை விமானப்படையின் தீயணைப்பு பிரிவு மற்றும் அம்பாறை மாநகர சபையின் தீயணைப்பு வாகனங்கள் ஈடுபட்டுள்ளன என நவகம்புர பொலிஸார் தெரிவிக்கின்றனர். (05)

# செய்வினை அகற்றுவதாக கோரி யாழில் பணமோசடி

யாழில். பெரும் பணக்காரர்களை இலக்கு வைத்து நபர் ஒருவர் பண மோசடியில் ஈடுபட்டு வருகிறார் எனவும், அது தொடர்பில் வர்த்தகர்கள் உள்ளிட்டவர்கள் விழிப்பாக இருக்குமாறும் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

யாழில் உள்ள பணக்காரர்களை இலக்கு வைத்து அவர்களின் தொலைபேசிக்கு அழைப்பு எடுக்கும் நபர் ஒருவர், தனது ஞான திருஷ்டியால் உங்களின் தொலைபேசி இலக்கத்தை அறிந்து கொண்டேன். உங்களுக்கு ஆபத்து வரப் போகிறது எனக் கூறி அழைப்பை துண்டித்து விடுவார்.

அதனை கேட்டவர்கள் குழப்பத்தில் இருக்கும் வேளையில், மறுநாள் மீண்டும் அவர்களுக்கு அழைப்பு எடுத்து, உங்களுக்கு பெருநஷ்டம் ஏற்பட போகிறது. உங்கள் வளர்ச்சியில் பொறாமை கொண்டவர்கள் உங்களுக்கு செய்வினை செய்து சூனியம் வைத்துள்ளார்கள். அந்த செய்வினையை உடனே அகற்ற வேண்டும். நான் ஒரு மாந்திரீகவாதி, என்னால் மட்டுமே அதனை அகற்ற முடியும் எனக் கூறி சில பொதுவான பிரச்சினைகளைக் கூறி அவர்களுக்கு நம்பிக்கை வரும் வகையில் செயற்படுவார்.

ஒருவாறு அவர்களுக்கு நம்பிக்கை வந்ததும், அவர்களிடம் முற்பணமாக ஒரு பெரும் தொகை பணத்தை அவர் சொல்லும் வங்கி கணக்கு இலக்கத்திற்கு வைப்பிலிடச் சொல்லுவார். பணம் வைப்பிலிடப்பட்டதும் அவரது தொலைபேசி இலக்கம் செயலிழந்துவிடும். அதன் பின்னரே தாம் ஏமாற்றப்பட்ட விடயத்தை அவர்கள் அறிந்து கொள்வார்கள். குறித்த நபருக்கு எதிராக முறைப்பாடு செய்வதற்கு அவரின் பெயர் விவரங்கள் தெரியாததாலும், சிலர் தமது அந்தஸ்து கருதி முறைப்பாடு செய்ய முன்வராததால் அந்நபரின் ஏமாற்று வேலைகள் தொடர்ந்து கொண்டே உள்ளதால் அது தொடர்பில் மக்களே விழிப்பாக இருக்கவேண்டும் என பொலிஸார் தெரிவித்தனர். (05)

# மிகவும் அரிதான மிகப்பெரிய கல்வெட்டு பொலன்னறுவை பகுதியில் கண்டுபிடிப்பு



பொலன்னறுவை வரலாற்றுச் சிறப்புமிக்க திம்புலாகல ஆரண்ய சேனாசன மலைப்பகுதியில் இலங்கையில் மிகவும் அரிதான மற்றும் மிகப்பெரிய கல்வெட்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலன்னறுவை தொல்பொருள் அலுவலகம் தெரிவித்துள்ளது. இந்தக் கல்வெட்டு 45 அடி நீளமும் 18 அடி உயரமும் கொண்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொல்பொருள் திணைக்களத்தின் தலைமை அலுவலகக் கல்வெட்டு பிரிவு அதிகாரிகள் மற்றும் பொலன்னறுவை தொல்பொருள் ஆய்வு குழுவினர் இணைந்து இந்த அரிய கல்வெட்டைக் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தக் கல்வெட்டை நகலெடுப்பதற்கு ஒரு மாதத்துக்கு மேல் தேவைப்படும் எனத் தொல்லியல்துறை தெரிவித்துள்ளது. (05)


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN
EASILY
REGISTER &
BOOK
YOUR RIDE
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
138, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர் Kalaikkathir

# கிரிக்கெட் இடைக்கால குழுவுக்கு எதிராக இடைக்கால தடை வழங்கிய நீதிபதிக்கு எதிராக குற்றப்பிரேரணை கொண்டுவருக

## கிரியெல்ல ஆக்ரோஷம்



இலங்கை கிரிக்கெட் சபையை ஊழல்மோசடியில்இருந்துபாதுகாக்க கிரிக்கெட் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் கிரிக்கெட் இடைக்கால குழுவுக்கு நீதிமன்றம் வழங்கிய இடைக்கால தடை காரணமாக கிரிக்கெட் சபையில் பாரியளவில் மோசடிகள்இடம்பெற்றுவருகின்றன.

அதனால் இந்தத் தீப்பு வழங்கிய நீதிபதிக்கு எதிராக குற்றப்பிரேரணை கொண்டுவர நாடாளுமன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சி பிரதமகொரடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஊழல் மிக்க இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரசபையின் தலைவர் உட்பட நிர்வாகசபை தலைவர் உட்பட நிர்வாக சபையை நீக்குதல் மற்றும் புதிய கட்டமைப்பொன்றை சட்டம் மூலம் அனுமதிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயேஇவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

அமைச்சு சார் விடயங்களை ஆராய இடைக்கால குழு அமைப்பதற்கு அமைச்சருக்கு பூரண அதிகாரம் இருக்கிறது. அதன் பிரகாரம் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க கிரிக்கெட் நிர்வாகத்தை நீக்கி, இடைக்காலக் குழுவொன்றை அமைத்தது சட்ட ரீதியானது. அதற்கான அதிகாரம் அவருக்கு இருக்கிறது.

அதன் பிரகாரம் பதவி நீக்கப் பட்டவர்கள் நீதிமன்றம் சென்றபோது நீதிமன்றம் இது தொடர்பாகவிடயத்துக்குப்பொறுப்பான அமைச்சரை அழைத்து விளக்கம் கோரி இருக்க வேண்டும். அதனை நீதிமன்றம் செய்யவில்லை.

அத்துடன் இலங்கை கிரிக்கெட் சபை தொடர்பாகவும் அதன் ஊழல் மோசடிகள் தொடர்பாக கடந்த ஒகஸ்ட் மாதம் 24ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விவாதம் ஒன்று இடம்பெற்றது. அதில் ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்து வந்தது, கிரிக்கெட் சபையில்இருக்கும்ஊழலைஇல்லாமலாக்க வேண்டும் என்பதாகும்.

அதனால்நாடாளுமன்றவிவாதம் தொடர்பாக நீதிமன்றம் தெரிந்திருக்க வேண்டும். நீதிமன்றம் இது தொடர்பில் உணர்ந்திருந்தால் நீதிமன்றம் கிரிக்கெட் இடைக்காலக் குழுவுக்கு இடைக்காலத் தடை விதித்திருக்காது.

அத்துடன் நீதிமன்றம் இடைக் காலக் குழுவுக்கு இடைக்காலத் தடை விதித்துள்ளமையைப் பயன்படுத்திக்கொண்டு கிரிக்கெட் சபையில் இருப்பவர்கள்தற்போது பாரியளவில் பொருள்களை அங்கிருந்து அகற்றி வருவதாக எமக்குத் தகவல் கிடைக்கிறது. அதேபோன்று வங்கிகளில்இருந்துகோடிக்கணக்கில் பணம் மீளப்பெறுவதாக எமக்குத் தகவல் கிடைக்கிறது.

இந்த நிலைக்கு யார் காரணம். கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்கறிக்கைக்கு அமையவே இடைக்கால குழுவொன்றை அமைச்சர் அமைத்தார்.

அத்துடன் நீதிமன்ற இடைக்காலத் தடை உத்தரவு காரணமாகவே இலங்கை கிரிக்கெட் சபை நிர்வாகத்தின் கோப்புகள் மற்றும் வங்கிகளில் இருக்கும் பணம் அகற்றும் நடவடிக்கை இடம்பெறுகிறது.

அதனால் மேன்முறையீட்டு நீதிபதியின் இந்தத் தீர்ப்பு தொடர்பாக அவருக்கு எதிராக இந்த நாடாளுமன்றம் குற்றப்பிரேரணை ஒன்றைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேநேரம் இந்த நீதிபதிகளின் உறவு மற்றும் நட்பு தொடர்பான விடயங்கள் இந்த சபையில் வெளிப்படுத்தப்பட்டன.

அத்துடன் இலங்கையில் 12 கிரிக்கெட் சங்கங்களே கிரிக்கெட் விளையாடுகின்றன. ஆனால் கிரிக்கெட் சபைக்கு நிர்வாகிகளைத் தெரிவுசெய்ய 142 சங்கங்கள் வாக்களிக்கின்றன. இதில் அதிகமான சங்கங்கள் நிர்வாக தெரிவுக்கு வாக்களிப்புக்காக மாத்திரம் பதிவு செய்துகொண்டிருக்கின்றன.

அதனால்இந்தசங்கங்கள்குறித்து நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இவை அனைத்துக்கும் அப்பால் கிரிக்கெட் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள வேண்டும் அத்துடன் இலங்கை கிரிக்கெட் சபை ஊழல் மோசடிமிக்கது என முழு இலங்கைக்கும் தெரியும். அதனால் நீதிமன்றத்துக்கு இது தெரியாது எனத் தெரிவிக்க முடியாது.

மோசடி அதிகாரிகளைப் பதவி நீக்கியதால் அந்த அதிகாரிகளே நீதிமன்றம் சென்றுள்ளனர். அப்படி இருக்கும்போது நீதிமன்றம் விளையாட்டுத்துறை அமைச்சரிடம் இது தொடர்பாக விளக்கம் கோராமல் இடைக்கால தடை போடடுவதற்கு நீதிமன்றக்கு இருக்கும் அவசரம் என்ன என கேட்கிறோம். - என்றார். (05)

# கிரிக்கெட் நிர்வாக சபை பதவி விலக வேண்டும்!

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கோரிக்கை



நாட்டின் கிரிக்கெட் விளையாட்டைப் பாதுகாப்பதற்கு ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற பேதமின்றி ஒன்றிணைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும். சித்ரசிறி அறிக்கையை அடிப்படையாக வைத்துபுதியசட்டத்தைஉருவாக்க முடியும் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்இடம்பெற்ற ஊழல் மிக்க இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரசபையின் தலைவர் உட்பட நிர்வாகசபை தலைவர்உட்படநிர்வாகசபையை நீக்குதல் மற்றும் புதிய கட்டமைப்பைப்பொன்றை சட்டம் மூலம் அனுமதிக்கும்பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

இலங்கை கிரிக்கெட் சபையின் செயற்பாடுகள் தொடர்பில் நாட்டில் பாரிய மக்கள் எதிர்ப்பு உருவாகியுள்ளது. அந்த வகையில் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டுள்ள இந்தயோசனையை நிறைவேற்றுவது நாட்டு மக்களின் கருத்துக்களுக்கு கெளரவமளிப்பதாகவே அமையும். இந்த மக்கள் கருத்தை பிரபலப்படுத்துவது தவிர வேறு எந்த சட்டபூர்வ உரிமையும் எமக்குக் கிடையாது.

அந்த வகையில் தேவையில்லாத பிரச்சினைகளுக்கு வழிவகுக்காமல் தற்போதுள்ள கிரிக்கெட் நிர்வாக சபையைத் தயவு செய்து பதவி விலகுமாறு நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

அத்துடன் கிரிக்கெட் சபையில் இடம்பெறுகின்ற செயற்பாடுகள் இனியும் இடம்பெறாமல் உரிய நடவடிக்கை எடுப்பதும் அவசியமாகும்.

சித்ரசிறி அறிக்கைக்கிணங்க, அதனை அடிப்படையாகக் கொண்டு நாம் அரசியலுக்கு அப்பால் சட்டமொன்றைத் தயாரித்துள்ளோம்.

அதில் அமைச்சருக்கு கூட அதிகாரம் கிடையாது. சிவில் சமூகத்திற்கே முழுமையான அதிகாரம் அதில் காணப்படுகிறது.

தற்போதைய ஜனாதிபதி குறுகிய அரசியலில் பயணிப்பவர் அல்லர். குறுகிய கால அரசியல் இலாபத்திற்காகவன்றி நீண்ட கால எதிர்பார்ப்பைக் கொண்ட முறைமையொன்றை அரசாங்கம் வகுத்துள்ளது.

தற்போதுள்ள கிரிக்கெட் நிர்வாக சபை ஊழல் நிறைந்தது. அவர்களை வீட்டுக்கு அனுப்புவதற்கு சட்டரீதியான முறைமை தயாரிக்க வேண்டியது அவசியம்.

இருட்டில்கைகளைநுழைத்து இந்த பிரச்சினைக்கு பதில் தேட முடியாது.

அவசரமாக எதையாவது செய்யப்போய் அதன் மூலம் 'சம்மி' க்களையே பலப்படுத்த நேரும். அதனை சரியாக சிந்தித்து, அதற்கான சட்டத்தை பலமானதாக உருவாக்க விளையாட்டுத் துறை சட்டத்தில்மாற்றம்கொண்டுவரப்பட வேண்டும். - என்றார். (05)

# வீடுகளை உடைத்து திருடிய குற்றச்சாட்டில் விசேட அதிரடிப்படை முன்னாள் வீரர் கைது!

கொட்டாவ மற்றும் மாலபே பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இரண்டு வீடுகளை உடைத்து, பெறுமதியான மாணிக்கக் கற்கள் மற்றும் தங்கம் உட்படபதினைந்துலட்சம்ரூபாவுக்கும் அதிகமான உடைமைகளைத் திருடிய சந்தேகத்தில் விசேட அதிரடிப்படை முன்னாள் வீரர் ஒருவர் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டார் என கொட்டாவ பொலிஸார் தெரிவித்தனர்.

கொட்டாவ வித்தியாலய சந்தி பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொட்டாவதெல்கஹவத்தபிரதேசத்தில் வீடொன்று உடைக்கப்பட்டு மாணிக்கக்கற்கள்திருடப்பட்டசம்பவம் தொடர்பில் கொட்டாவ பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது. இதனடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்தே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். (05)

# ஹெரோயின் போதைப் பொருளுடன் பிலியந்தலையில் ஒருவர் கைதானார்

பிலியந்தலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் பிலியந்தலை பொலிஸாரால் புதன்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

பிலியந்தலைபிரதேசத்தில்பொலிஸ் அதிரடி படையினரால் சந்தேக நபரின் ஓட்டோ சோதனை இடப்பட்டது.

இதன்போது ஓட்டோவிலிருந்து 5 கிராம் 500 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர் பிலியந்தலை - அரேவல பிரதேசத்தை சேர்ந்த 44 வயதுடைய நபர் ஆவார்.

குறித்த ஓட்டோ கடந்த நவம்பர் 08ஆம் திகதி அன்று மொரட்டுவை பிரதேசத்தில் திருடப்பட்டது என பொலிஸார் விசாரணையின் போது தெரியவந்துள்ளது.



சந்தேக நபர் பல்வேறு பிரதேசங்களில் இடம்பெற்ற பல குற்றச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனவும் பொலிஸாரால் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் பிலியந்தலை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (05)

# ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பம் கோரல்

உடுவில் பிரதேச செயலகப் பிரிவில் அமைந்திருக்கும் கலாசார மத்திய நிலையத்தில் கலைப்பாடங்களைக் கற்பிப்பதற்கு ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கர்நாடக சங்கீதம், பரதநாட்டியம், மிருதங்கம், வயலின், நாடகமும் அரங்கியலும், ஓகன், சித்திரமும் வடிவமைப்பும், சிங்களம் ஆகிய பாடநெறிகள் கற்பிக்கப்படவுள்ளன.

இதற்காக உடுவில் பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் மேற்படி பாடங்களைக் கற்பிக்கக்கூடிய தகுதி வாய்ந்த ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கற்பிக்க ஆர்வமுள்ளவர்கள் தங்களது சுய விவரங்களை இந்த மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் 'நிலையப்பொறுப்பதிகாரி, கலாசார மத்திய நிலையம், கற்பொக்கனை பிள்ளையார் கோயிலடி, உடுவில்' என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (05)

# அநுராதபுரம் வைத்தியசாலையின் இரு மருத்துவர்கள் மீது தாக்குதல்

வாரியப்பொல நகரில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் அநுராதபுரம் வைத்தியசாலையின் வைத்தியர்கள் இருவர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் காயமடைந்த வைத்தியர் ஒருவர் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார் என வாரியபொல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம்தொடர்பில்அநுராதபுரம் பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகம் விசேட பொலிஸ் அறிக்கை ஒன்றின் ஊடாக அறிவித்துள்ளதையடுத்து, வாரியபொல பொலிஸார் சந்தேக நபர்களை அடையாளம் கண்டு கைது செய்வதற்கான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர்கள், தாதியர்கள் குழுவொன்று பணி அமர்வில் பங்குபற்றுவதற்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குச் சென்று பஸ்ஸில் அநுராதபுரம் நோக்கி திரும்பிக்கொண்டிருந்தபோதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (05)

# கோவில்களையும் காணிகளையும் இந்த ஆட்சி அபகரித்து வருகிறது

## இது நல்லதல்ல என ஆறு.திருமுருகன் காட்டம்



அரசாங்கம் சைவமக்களை மனம் நோகச்செய்து வருகிறது. கோவில்களையும் காணிகளையும் அபகரித்து வருகிறது. இது அரசாங்கத்துக்கு நல்லதல்ல என அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் கவலைவெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில்அவர்மேலும் தெரிவிக்கையில்– சைவமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் நாட்டின் ஜனாதிபதி மற்றும் பிரதமர், அரச அதிகாரிகள் எவ்விதமான அக்கறையும்இல்லாமல் இருப்பது மனவருத்தத்தைத் தருகிறது.

ஜனாதிபதி யாழ்ப்பாண விஜயத்தின்போது நல்லை ஆதீனத்தின் குரு முதல்வரையும் என்னையும் சந்தித்து கலந்துரையாடியபோது, காங்கேசன்துறை தல்செவன ஹொட்டல் பயன்படுத்தப்படுகின்ற நிலம்சைவசமயத்தவர்களின்சுக்கிர பாத திருவார சத்திரம் இருந்த இடம். இந்தசத்திரம்இடிக்கப்பட்டுஹொட்டல் பயன்பாட்டுக்காக இந்த நிலம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நிலம் ஒப்படைக்கப்பட வேண்டும். எத்தனையோஅடியவர்கள்உணவு உண்பதற்காக அன்னதானம் நடைபெற்ற இடமாக, காலையில் சூரிய வழிபாடு செய்யும் இடமாக விளங்க சித்தராலே கட்டப்பட்ட சுப்பிரபாத சத்திரக் காணியை கையளிக்கவேண்டும் என ஜனாதிபதியிடம் வேண்டுதல் விடுத்தபோது உடனடியாக அதற்கு நடவடிக்கைஎடுத்துகையளிப்பேன் என்று ஜனாதிபதி வாக்குறுதி அளித்தார்.

இந்தச் சந்திப்பு ஜனவரி மாதம் நடைபெற்று இன்றுடன் 11 மாதங்கள் ஆகின்றது. எவ்விதமான நடவடிக்கையும் இல்லை. அதேநேரத்திலே கீரிமலைகாங்கேசன்துறைவீதியில் ஜனாதிபதிமாளிகைஅமைக்கப்பட்ட நிலப்பரப்பில்ஆதிசடையம்மாமடம் உட்பட எத்தனையோ தொன்மை வாய்ந்த அந்தண கிருஸ்ணர் கோவில், உச்சிப்பிள்ளையார் கோவில் அழிக் கப்பட்டன.

இது தொடர்பாக ஜனாதிபதிக்கு நேரில் நல்லை ஆதீனத்தால் எடுத்துரைக்கப்பட்டபோதும் விரைவாக விடுவித்து, அந்த ஆலயங்களை புனருத்தாரனம் செய்வதாக உறுதியளித்தார். ஆனால்,இன்றுவரைஅதுநடைபெறவில்லை.

சைவ மக்கள் மிகுந்த மன வருத்தத்துடன் இந்த விடயத்தை வெளிப்படுத்தி வருகிறார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திலும் இது தொடர்பில் கதைத்திருத்தார்கள். ஆனாலும், இது தொடர்பாக எந்த நடவடிக்கையும்எடுக்கப்படவில்லை. நாங்கள்எழுதுகின்றகடிதங்களுக்கு பதில்களும் கிடைப்பதில்லை.

இன்று இலங்கை வாழ் சைவ மக்களை மனம் நோகச் செய்கின்ற விடயங்கள் தொடர்ந்து இடம்பெறுகின்றன.இந்தவிடயத்தில் சைவ மக்களின் மன நிலையைக் கவனத்தில்கொள்ளவேண்டும்என்று இந்த தீபாவளியில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

சைவ மக்களின் கோவில்கள், நிலங்கள் பறிபோய்க்கொண்டிருக்கின்றன. திருகோணமலை கோவில் பாதைகளில் அடாத்தாக போடப்பட்டகடைகளைஅகற்றுமாறு பலதடவைகள்வேண்டியும்அந்தக் கடைகள் அகற்றப்படவில்லை. அதற்கு எத்தகைய முயற்சியும் எடுக்கப்படவில்லை.

கன்னியா வெந்நீரூற்றுக்கு அருகிலிருந்த மடங்கள் அழிக்கப்பட்டன. ஆனால், அதனை கட்டுவதற்கான அனுமதியும் இல்லை. பௌத்த சமயத்தவர்களின் கட்டடங்கள் கட்டப்பட்டுக்கொண்டு வருகின்றன.

எனவே, இந்த நாட்டில் சைவ மக்களுக்கு தருகின்ற தொல்லை என்பது எல்லையற்றது. இது இந்நாட்டுக்கு உகந்ததல்ல. சைவ மக்களின் சாபத்துக்கு இவர்கள் ஆளாகின்றார்கள்.

ஜனாதிபதிக்கும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் கூற வருவது என்னவெனில், தீபாவளியை முன்னிட்டு குறித்த நிலங்கள் மீட்கப்படாவிட்டால் எதற்கும் அர்த்தமில்லை. - என்றார்.

(05)

# மட்டக்களப்பு மக்களுக்கு பொலிஸாரின் அறிவித்தல்

மட்டக்களப்பு பிரதேசத்தில் திருட்டு சம்பவங்கள் அதிகரித்துள்ளதுடன், திருடர்கள் பகலிலும் இரவிலும் நடமாடுகிறார்கள் எனத் தகவல் கிடைத்துள்ளது.

எனவே, பொது மக்கள் தமது உடைமைகளைப் பாதுகாப்பாக வைத்திருக்குமாறும் சந்தேகத்துக்கு இடமாக நடமாடினால் உடன் பொலிஸாருக்குஅறிவித்துஒத்துழைக்குமாறு பொதுமக்களை மட்டு தலைமையக பொலிஸார் கோரியுள்ளனர்.

மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகம் பொது மக்களுக்கு அறிவித்தல் விடுத்து வியாழக்கிழமை துண்டு பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

அண்மைகாலமாக பகலிலும் இரவிலும் திருட்டுச்சம்பவங்கள் அதிகரித்துள்ளது. எனவே, பொதுமக்கள் நீங்கள் உங்களுடைய உடைமைகளை கவனமாகவும் பாதுகாப்பாகவும்வைத்திருப்பதுஉங்களுடைய பொறுப்பாகும்.

எனவே, பொதுமக்கள் தங்களின் வாகனங்கள், தங்க ஆபரணங்கள், பணம் மற்றும் ஆவணங்களை பாதுகாப்பாக வைத்துக் கொள்ளவும்.

அதேவேளை, தாங்கள் வீட்டை விட்டுவெளியேசெல்லும்போதுவீட்டை நன்றாக பூட்டி திறப்பினை கொண்டு செல்லவும். அதைவிடுத்து திறப்பை பூச்சாடியின் கீழே, கால்துடைப்பான் கீழே வைப்பதை தவிர்ப்பதுடன் சிறுபிள்ளைகளை தனிமைப்படுத்தி வீட்டில் விட்டு வெளியே செல்வதை தவிர்க்கவும்.

சிறுவர்களுக்கு தெரியாதவர்கள் இனிப்பு பண்டம் வழங்கினால் அதை வாங்கி உண்ணவேண்டாம் என பிள்ளைகளுக்கு அறிவுறுத்துவதுடன் வீட்டிற்கு அறிமுகம் இல்லாத நபர்கள் வருவதற்கு அனுமதிக்கவேண்டாம்.

அதேவேளை, யாசகம் பெறும் மற்றும் பொருள்களை விற்பனை செய்வதாக கூறிவரும் நபர்கள் மீது கவனமாக இருக்கவும், வெளியில் வாகனம் நிறுத்தத் தேவை ஏற்பட்டால் சிசிரிவி கமரா பொருத்தப்பட்ட இடத்தில் நிறுத்தவும்.

அவ்வாறே வியாபார நிலைய கதவுகளைப்பாதுகாப்பான முறையில் அமைத்துக் கொள்வதுடன், சிசிரிவி கமரா பொருத்தப்படல் அவசியம். எனவே, பொதுமக்கள் தமது உடைமைகளில்அதிககவனம்எடுத்துசெயற்படுமாறும் சந்தேகத்துக்கு இடமான நபர்கள் நடமாடினால் உடன் 119 அவசரசேவை அல்லது 0718591130 பொலிஸ் பொறுப்பதிகாரி அல்லது 065 2224422 பொலிஸ் நிலைய இலக்கத்துக்கு அழைத்து பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பொதுமக்களை பொலிஸார் கேட்டுள்ளதாக அந்த துண்டு பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (05)

# நுவரெலியா தபால் நிலையத்தை விற்பதற்கு எதிராகப் போராட்டம்





நுவரெலியா தபால் நிலையத்தை சுற்றுலா நோக்கங்களுக்காக பயன்படுத்துவதற்கான ஜனாதிபதியின் தீர்மானத்திற்கு அமைவாகதாஜ்சமுத்திராசுற்றுலா விடுதிக்கு விற்பனைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நுவரெலியா பிரதான நகரில் தபால் நிலையதிற்கு முன்பாகநேற்று(வியாழக்கிழமை) எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நுவரெலியா பிரதான நகரின் மத்தியில் அமைந்துள்ள விலைமதிப்பற்ற வளமாகக் கருதப்பட்ட நுவரெலியா தபால் நிலையத்தை தாஜ் சமுத்ரா ஹோட்டல் நிறுவனத்துக்கு ஒப்படைக்க யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதற்கு பலரும் எதிர்ப்பு காட்டுவதுடன் பிரதானமாக நுவரெலியா மக்கள் பல்வேறு வழிகளில் தமது எதிர்ப்பை தெரிவித்துள்ளனர்.

இந்தப்போராட்டத்தில்தொழிற் சங்கங்கள், வெகுஜன அமைப்புகள், சிவில் செயற்பாட்டாளர்கள் , சட்டத்தரணிகள் உள்ளிட்ட நாட்டின்அனைத்துநகரங்களிலும் ஏராளமான தபால் நிலைய ஊழியர்கள் பெருமளவிலானவர்கள் போராட்டத்துடன்இணைந்ததுடன் போராட்டக்காரர்கள் கறுப்புக் கொடி காட்டிய வண்ணம் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.






இந்நிலையில் நுவரெலியா பிரதான நகரில் உள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தையும் போராட்டம் ஆரம்பித்த நேரம் முதல் மூடி வர்த்தக சங்கம் , நுவரெலியா முச்சக்கர வண்டிகள் சங்கம் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் ஆதரவு வழங்கி கடைகளை பூட்டி போராட்டத்தில் இணைந்து கொண்டனர்.

நுவரெலியா நகரில் கொட்டும் மழைக்கு மத்தியிலும் போராட்டக்காரர்கள் தொடர்ந்து போராட்டங்களை முன்னெடுத்துடன் நுவரெலியா பிரதான நகரில் உள்ள வீதிகளில் பேரணியாக சென்று பெருந்திரளானவர்கள் திரண்டு அமைதியான முறையில் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

குறித்தபோராட்டம்காரணமாக நுவரெலியா பிரதான நகருக்கான வீதியில் போக்குவரத்து சுமார் ஒரு மணித்தியாலயம் தடைப்பட்டு இருந்தது .

போராட்டம் முன்னெடுக்கப்படும் பகுதியில் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டு இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# பாடசாலைக்கு சென்று கொண்டிருந்த மாணவன் வீதியில் வீழ்ந்து உயிரிழப்பு

பாடசாலைக்குச் செல்வதற்காக வீட்டிலிருந்துநேற்று(வியாழக்கிழமை) காலை வெளியேறிய கொபவக கோவின்னவைச்சேர்ந்த 12 வயதுடைய பாடசாலை மாணவன் வீட்டுக்கு அருகில் உள்ள வீதியில் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார் என புலத்சிங்கள பொலிஸார் தெரிவித்தனர்.

புளத்சிங்கள பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசம் ஒன்றைச் சேர்ந்த 12 வயதுடைய ஹொரண பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் மாணவர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த மாணவன் பாடசாலைக்கு செல்வதற்காக தனது வீட்டிலிருந்து சுமார் 500 மீற்றர் தூரம் சென்று கொண்டிருந்தபோது வீதியில் வீழ்ந்ததில் காயமடைந்து ஹொரணை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஹொரண வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார் என ஹொரண வைத்தியசாலை பொலிஸார் புலத்சிங்களபொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். (05)

# 20 வைத்தியசாலைகள் நாடளாவிய ரீதியில் மூடல்

நாடளாவிய ரீதியில் 20 வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளன என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

வைத்தியர்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடுகாரணமாகவேஇவ்வாறு20 வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளன என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.11.2023இல் வெளியிடப்பெற்றது.